பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 10 வெள்ளிக்கிழமை 23.04.2021 கதிர் 169

### இது ரகசியம் அல்ல!

குருவி இருக்கப் பனம்பழ விழுந்த கதையைப் பற்றிச் சொல்வார்கள்.

பாவம், நமது யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி ஸ்ரீசற்குணராசாவின் நிலைமையும், நமது சில ஊடகங்கள் அவர் குறித்து

பக்கம்02 »

# திரிபடைந்த புதிய வீரிய வைரஸே தொற்று அதிகரிப்புக்குக் காரணம்?



## நிபுணர்கள் அவசர ஆய்வு

கொழும்பு, ஏப்ரல் 23

நாடு முழுவதிலும் பல்வேறு பிரதேசங்களில் தற்போதைய நிலையில் கொவிட் தொற்றாளர்கள் எண்ணிக்கை திடீரென அதிகமாகப் பதிவாகி வருகின்ற சூழலில், இதுவரை இலங்கையில் பரவிய கொரோனா வைரஸ் வகையை விட வேறுபட்ட – திரிபடைந்த – வீரியம் மிக்க – புதிய ரகம் அதற்குக் காரணமாக இருக்கலாம் என அஞ்சப்படுகின்றது. அதை அடுத்து நாட்டில் பரவி வரும் கொரோனா வைரஸ்களை அவரசமாக ஆய்வுக்கு உட்படுத்தி உண்மையைக் கண்டறியும் நடவடிக்கைகளில் நிபுணர்கள் ஈடுபட்டிருக்கின்றனர்.

☞2

## கொரோனாவுக்கு நேற்றும் ஐவர் பலி

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் நேற்றிரவு தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை

☞2

## குடாநாட்டில் நேற்று 16 பேருக்குத் தொற்று

யாழ்.ஆய்வுகூடங்களில் நேற்றைய தினம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் தொற்று உறுதி செய்யப்பட்ட 16 தொற்றாளர்கள் குறித்த விவரம் வெளியாகியுள்ளது.

யாழ்.ஆய்வுகூடங்களில் நேற்று 396 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் யாழ் குடாநாட்டை சேர்ந்த 16 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள பணிப்பாளர் வைத்தியர் ஆர். கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.

☞2

## 2ஆம் நாளாகத் தொற்று ஐந்நூறைத் தாண்டியது!

### நேற்று மட்டும் 637 பேர் இலக்காகினர்

இலங்கையில் மீண்டும் கொரோனாத் தொற்று பரம்பல் அதிகரித்துள்ள நிலையில் இரண்டாவது நாளாக நேற்றும் 500 இற்கு மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் நேற்று மாலை வரை 520 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது. நேற்று மாலைக்குப் பின் மேலும் 137 பேருக்கு தொற்று

☞2

## மொட்டுக் கூட்டணி இழுபறி முடிவுக்கு?

அரசுக்குள் இருந்து கொண்டு அண்மைய நாள்களாக அரசுக்கு எதிராக விமர்சனங்களை முன்வைத்த மொட்டுக்கட்சிக் கூட்டணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களின் கோபம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுடன் நடந்த சந்திப்பை அடுத்துத் தணிந்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

☞2

## 26 தொழிலாளர்களுக்கு பாணந்துறையில் தொற்று

புது வருட விடுமுறைக்காக வீடு சென்று விட்டு பாணந்துறையில் உள்ள தொழிற்சாலை ஒன்றிற்குத் திரும்பிய 26 தொழிலாளர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

விடுமுறைக்குச் சென்று திரும்பிய அனைத்துத் தொழிலாளர்களுக்கும் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பிரிசோதனையிலேயே 26 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து எடுக்க வேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பில் சுகாதார அதிகாரிகள் ஆலோசித்து வருகின்றனர் எனக் கூறப்பட்டது.

## கொத்மலையில் குளவி கொட்டிற்கு இலக்காகி 20 தொழிலாளர் பாதிப்பு

மலையக தோட்ட பகுதிகளில் குளவி கொட்டுக்கு இலக்காகி தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்டோர் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் நேற்றும் 20 பேர் கொட்டுக்கு இலக்காகினர்.

கொத்மலை, வெதமுல்ல – லிலிஸ்லேண்ட் தோட்டத்தில், நேற்றுக் காலை பணியில் ஈடுபட்டிருந்தபோது, அவர்கள் குளவி கொட்டுக்கு இலக்காகினர்

சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 20 ஆண் தொழிலாளர்களும், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில், 16 பேர் சிகிச்சைகளின் பின்னர் வீடு திரும்பியுள்ள நிலையில், ஏனைய நான்கு பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஹரின் பெர்னாண்டோ வைத்தியசாலையில்

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

திடீர் சுகயீனம் காரணமாக கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையொன்றில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

☞2

## ரவுடிக் கும்பல் நேற்று மாலை தும்பளையில் அட்டகாசம்!

யாழ்.வடமராட்சி, பருத்தித்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தும்பளை பகுதியில் வாள்களுடன் ரவுடிக் கும்பல் ஒன்று நேற்று மாலை 6.45 மணியளவில் அட்டகாசத்தில் ஈடுபட்டதில் அங்கு பதற்றம் ஏற்பட்டது.

தும்பளை பகுதியில் மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பல் மாணவி ஒருவருடன் தகராறில் ஈடுபட்டது. இதனை அவதானித்த அப் பகுதி இளைஞர்கள் அவ் விவகாரத்தில் தலையிட்டனர். அவர்களின் எதிர்ப்பை அடுத்து அக்கும்பல் தப்பியோடியிருந்தது.

சிறிது நேரம் கழித்து மீண்டும் ஐந்து மோட்டார் சைக்கிளில் பத்துப் பேராக வாள்களுடன் வந்த கும்பல் தும்பளை

☞2

## குளியாப்பிட்டி பிரதேசம் தனிமைப்படுத்தப்பட்டது

மேலும் பல கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமையை அடுத்து நேற்று நள்ளிரவு முதல் மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டம், குளியாப்பிட்டி பொலிஸ் பிரிவு தனிமைப்படுத்தல் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, குளியாப்பிட்டி நகர் எல்லை, கஹதுல்ல, பஹல வீர ஒவ, சேனாதிகம மற்றும் துன்மோதர ஆகிய பகுதிகள் நேற்று நள்ளிரவு முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்

☞2

## துணைவேந்தருக்கு மாரடைப்பு யாழ்.ஆஸ்பத்தியில் சிகிச்சை



யாழ்ப்பாணம், ஏப்.23

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீசற்குணராசா மாரடைப்புக் காரணமாக யாழ்.ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி வளாகத்துக்கு ஒரு கூட்டத்துக்குச் சென்று கொண்டிருந்த நிலையில் வாகனத்துக்குள் அவருக்கு மாரடைப்பு வந்திருக்கலாம் எனக்

☞2

## இரசாயன உரங்களின் இறக்குமதிக்கு முற்றாகத் தடை என்கிறார் ஜனாதிபதி

இரசாயன உரங்களை இறக்குமதி செய்வது மிக விரைவில் முற்றாக நிறுத்தப்படும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுப் பிற்பகல் கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டவாக்க சபைகளின் தலைவர்களுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

இரசாயன உரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் அதிக விளைச்சலை பெற முடியும். ஆனால், குளங்கள், கால்வாய்கள் மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுவதால் உயிர்களுக்கு ஏற்படும் சேதத்தை அந்த இலாபத்தால் ஈடுசெய்ய முடியாது. இரசாயன உரங்களின் தாக்கம்

☞2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளியிட்ட செய்திகளை நோக்கும் போது அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை.

யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தூபியை அழுத்தங்கள் காரணமாக, இடிப்பதற்கு அனுமதிக்க வேண்டிய இக்கட்டில் அவர் சிக்கினார் என்பது தெரிந்ததுதான்.

எனினும், அதற்குப் பின்னர் துணிந்து, தனித்து, தைரியத்துடன் அவர் காரியமாற்றியமையை இப்பத்தியில் நாங்களே மெச்சியிருந்தோம். அது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

தாமே முன்னின்று அந்த நினைவுத் தூபியை அமைப்பதற்கு அவர் எடுத்த நடவடிக்கை பாராட்டப்பட்டது. இயன்று விரைவில் அதைக் கட்டி முடித்து திறந்து வைப்பேன் என்று சூளுரைத்தார் அவர். மளமளவென்று காரியங்கள் நடத்தன. நினைவுத் தூபி எழுந்து நிற்கின்றது.

சரியோ, பிழையோ, உடைக்கப்பட்ட தூபி, யாழ்.பல்கலைக்கழக நிர்வாகத்தினது அனுமதியின்றி அமைக்கப்பட்டது. சட்ட விரோதக் கட்டடம்.

ஆனால், துணைவேந்தர் ஸ்ரீசற் குணராசாவின் நடவடிக்கையால் அதே இடத்தில், அதே தூபி சட்ட ரீதியாக, பல்கலைக்கழகத்தினாலேயே நிறுவப்பட்டு, பல்கழைக் கழகத்தினாலேயே பராமரிக்கப்படும் தகுதி நிலையுடன் எழுந்து நிற்கின்றது.

இந்தத் தூபியை இன்று தாமே முன்னின்று திறந்து வைக்க அவர் நடவடிக்கை எடுத்திருந்தார்.

துரதிஷ்டவசமாக அவருக்கு நேற்று முன்தினம் மாரடைப்பு ஏற்பட்டுள்ளது. அவரின் நிலைமை மிகுந்த மருத்துவக் கவனிப்புக்குரியது என வைத்திய வட்டாரங்கள் உறுதி செய்தன. அவருக்கு இதயத்தில் நான்கு குழாய்களில் அடைப்பு. அஞ்சியோகிராம் செய்து அடைப்பு அகற்றுவதா, அடைப்புப் பகுதிகளில் 'ஸ்ரெம்' வைத்து சரி செய்வதா என்பவை குறித்து இன்று தீர்மானிக்கப்படவிருக்கின்றது. இந்த சிகிச்சைகளைச் செய்யும் போது ஏதேனும் சிக்கல் நேர்ந்தால் இருதய அறுவை சிகிச்சையும் உடனடியாக மேற்கொள்ள நேரிடலாம். அதனால் இந்த சிகிச்சைகளை உடனடியாக கொழும்பில் தகுந்த ஆஸ்பத்திரியில் செய்வதுதான் உசிதம் என்ற நிலைப்பாடும் மருத்துவர் மத்தியில் உண்டு எனத் தெரிகின்றது. இது குறித்து யாழ்.ஆஸ்பத்திரி இருதய நோய் சிகிச்சை நிபுணர்கள் இன்று தீர்மானிப்பார்கள் என்றும் கூறப்பட்டது.

இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அவசர கிசிச்சைப் பிரிவில், கடும் மருத்துவக் கண்காணிப்பில் இருக்கும் பேராசிரியர் ஸ்ரீசற்குணராசா, மருத்துவக் கண்காணிப்பில் இருந்தபடி யாழ்.பல்கலைக்கழகத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பேச முற்படுகின்றார் என்றும் ஒரு தரப்புக் கூறியது.

இவ்வளவு தூரம் கடமை உணர்வு கொண்ட ஒரு கல்விமானை, முள்ளிவாய்க்காலில் நினைவுத் தூபியைத் திறக்க வேண்டிய சமயத்தில் ஆஸ்பத்திரியில் போய் படுத்துவிட்டார் என்ற தொனியில் அர்த்தம் தரும் விதத்தில் செய்தி வெளியிடுகின்றன சில சமூக ஊடகங்கள்.

தாமே அடிக்கல் நாட்டி, பழைய நினைவுத் தூபிபோல கட்டித் திறப்பேன் என்று சூளுரைத்து, அதனைச் செய்து, கம்பீரமாக எழ வைத்த துணைவேந்தருக்கு அதைத் திறந்து வைப்பதில் என்ன பின்னடைவு இருக்க முடியும்? வெளிப்படையாக சகலரும் பார்த்திருக்க இந்தப் பணியை அவர் முன்னெடுத்திருக்கும் போது அதைத் திறப்பதற்கு அவர் ஏன் பின்வாங்க வேண்டும்? அப்படி இருக்கையில் ஏன் இப்படித் தவறான கற்பிதங்களை எடுத்த எடுப்பில் முன்னிலைப்படுத்துகின்றார்கள்?

எலும்பு இல்லாத நாக்கைக் கொண்ட உலகம். எப்படியும், எதையும் புரட்டிப் போட்டுப் பேசும். துணைவேந்தர் அவற்றுக்குக் காது கொடுக்காமல், உரிய சிகிச்சை – பெற்று விரைவில் மீண்டு வந்து – தனது பணியை முன்னெடுக்கட்டும். தமிழ் மக்களின் சிந்தனை அவர் நலமடைய வேண்டுவதாக எப்போதும் இருக்கும்.

★ ★ ★

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் நடத்திய ரகளையின் போது நாடாளுமன்றத்தில் பயன்படுத்தப்படக் கூடாத – கொச்சையான – பச்சையான – பல சொல்லாடல்கள் தாராளமாக இடம்பெற்றிருக்கின்றன.

இது குறித்து நாடாளுமன்றத்தில் மனம் வெதும்பிக் கருத்து வெளியிட்டிருக்கின்றார் இளம் எம்.பியான நாமல் ராஜபக்ஷ.

*"கேவலமான வார்த்தைகள் தாராளமாகப் பயன்படுத்தப்பட்டன. அதனைப் பல எம்.பிக்கள் தங்களின் முகப் புத்தகக் கணக்குகள் ஊடாக நேரடி காணொலி அஞ்சல் செய்து நாடாளுமன்றத்தின் பெயரையே நாறடிக்கப் பண்ணி விட்டார்கள்."* – என்ற சாரப்பட சீறியிருக்கின்றார் நாமல்.

*"நாடாளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புச் செய்வது, அஞ்சல் செய்வது தொடர்பில் கடும் கட்டுப்பாடுகள் உள்ளன. ஆனால் ஆளும் தரப்பினதும், எதிரணியினதும் எம்.பிக்கள் தங்கள் முகப் புத்தக்க கணக்குகள் மூலம் நேரடியாகக் காணொலி அஞ்சலை இப்படிச் செய்வார்களாயின் இந்த ஊடகக் கட்டுப்பாடுகள் எல்லாம் எதற்காக?"* – என்றும் கேள்வியும் எழுப்பியிருக்கின்றார் நாமல்.

நாடாளுமன்றத்தின் பொட்டுக்கேடுகளை இந்த முகப்புத்தகக் கணக்கு அஞ்சல்கள் அம்பலப்படுத்தி விட்டமையால், ராஜபக்ஷக்களின் இளவரசருக்கு சீற்றம். என்ன செய்வது?

– மின்னல் –

---

## மொட்டுக் கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதன்படி அமைச்சர்களான விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை செவ்வாய் இரவு சந்தித்துள்ளனர்.

இதன்போது பல இணைக்கப்படுகளுக்கு மூவரும் வந்துள்ளார்கள் எனவும், இதனையடுத்து அவர்கள் சமரசம் அடைந்துள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

## குளியாப்பிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படுத்தப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்தப் பிரதேசத்தில் கொவிட் 19 வைரஸ் பரவலை தடுப்பதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் சடுதியாக கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமையே இந்த பயண கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காரணம் எனவும், நிலமை மேலும் வலுவடையுமாக இருந்தால் கட்டுப்பாடுகளை மேலும் வலுப்படுத்த எதிர்பார்க்கப்படுவதாக குளியாப்பிட்டிய சுகாதார பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

---

## துணைவேந்தருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கருதப்படுகின்றது. எனினும் கடும் உடல் அசௌகரியத்துக்கு மத்தியிலும் அவர் வாகனத்தில் தொடர்ந்து பயணித்து கிளிநொச்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கின்றார்.

அந்த அசௌகரியங்களுடனேயே யாழ்.திரும்பிய அவர் அதனை தொடர்ந்து, யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒரு முக்கிய கூட்டத்தில் பங்கு பற்றினார் எனத் தெரிகின்றது.

உடல் அசௌகரியம் மோசமானமையை அடுத்து, நேற்றுமுன்தினம் முன்னிரவு அவர் யாழ்.தனியார் வைத்தியசாலை ஒன்றுக்கு விரையப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பூர்வாங்க பரிசோதனையில் அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டதனாலும், மீண்டும் மாரடைப்பு ஏற்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாகக் கருதப்பட்டமையினாலும், அவர் உடனடியாக யாழ்.ஆஸ்பத்திரி தீவிர சிகிச்சைக் கண்காணிப்புப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இரவு யாழ்.ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்ட அவருக்கு நேற்று இருதய சோதனைகள் செய்யப்பட்டன. நான்கு குழாய்களில் அடைப்பு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டதாக அறியவந்தது.

அவருக்கு எத்தகைய சிகிச்சை அளிப்பது, அச்சிகிச்சையை மேற்கொள்வதற்காக கொழும்புக்கு அவரை உடனடியாக அனுப்பி வைப்பதா என்பவை தொடர்பில் இன்று வைத்திய நிபுணர்கள் முடிவு செய்ய விருக்கின்றனர் எனவும் தெரியவந்தது. (உ)

# திருமண, மரண வீடுகளில் ஆள்களுக்குக் கட்டுப்பாடு?

திருமண நிகழ்வுகள், மரணச் சடங்குகள் உள்ளிட்ட நிகழ்வுகளில் கலந்துகொள்வோரின் எண்ணிக்கையை மட்டுப்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக கொவிட் தொற்று தடுப்புக்கான இராஜாங்க அமைச்சர் விசேட வைத்தியர் சுதர்னி பெர்ணான்டோ புள்ளே தெரிவித்தார்.

இவ்வாறான நிகழ்வுகளில் கலந்துகொள்வோர் தொடர்பில் இதற்கு முன்னர் பின்பற்றப்பட்ட சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ள பின்னணியிலேயே, இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

# புத்தாண்டுச் சுற்றுலா சென்ற 52 பேருக்குத் கொரோனா!

புத்தாண்டு பருவத்தில் பஸ்களில் சென்ற திவுலபிட்டி மற்றும் வத்தளை பகுதியில் வசிக்கும் 52 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டப் பிராந்திய சுகாதார சேவைகள் இயக்குநர் டாக்டர் நலின் ஆரியரத்ன இதை தெரிவித்தார்.

திவுலபிட்டியில் வசிப்பவர்கள் 45 பேர் நுவரெலியாவுக்கு பஸ்களில் சுற்றுலா சென்றிருந்தனர். இவர்களில் 38 பேருக்கு கொரோனா வைரஸ் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், வத்தளை பகுதியில் உள்ள ஒரு குழு புத்தாண்டை முன்னிட்டு பஸ்களில் சுற்றுலா சென்றுள்ளது. இவர்களில் 14 பேர் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் உள்ள தொழிற்சாலைகளில் மேலும் நான்கு தொழிலாளர்களுக்கு நேற்று கொரோனா வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

---

## திரிபடைந்த புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை மற்றும் நோயெதிர்ப்பு மற்றும் கல உயிரியல் நிறுவனம் கொவிட் வைரஸ் குறித்து புதிய சோதனைகளைத் ஆரம்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, வரும் செவ்வாய்கிழமை புதிய பரிசோதனைகளை ஆரம்பிக்கவுள்ளனர் என அதன் பணிப்பாளர், வைத்தியர் சந்திம ஜீவந்தர தெரிவித்தார்.

சாதாரண பி.சி.ஆர். சோதனைகள் மூலம் இலங்கையில் பரவும் புதிய கொவிட் 19 வைரஸின் ரகத்தை அடையாளம் காண முடியாமையினால் இந்தப் புதிய பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, அமெரிக்கா, பிரிட்டன், தென்னாபிரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் வேகமாக பரவி வரும் வைரஸ் இலங்கையினுள் பரவியுள்ளதா என்பது தொடர்பில் அறிந்துக் கொள்ளமுடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பரிசோதனைகளின் மூலம் மிகக் குறுகிய காலத்தில் முடிவுகளைத் பெற்றுத் தர முடியும் என வைத்தியர் சந்திம ஜீவந்தர மேலும் தெரிவித்தார்.

---

## ரவுடிக் கும்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திக்கமுனை விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்களை வாள் கொண்டு துரத்தியுள்ளது.

இதையடுத்து அங்கு விளையாடிக் கொண்டிருந்த இளைஞர்கள் கலைந்தோடியுள்ளனர்.

அப்போது 'பொலிஸ்' என யாரோ கத்தியமையால், பதற்றமடைந்த ரவுடிக்கும்பல் இரண்டு வாள்களை போட்டு விட்டு தப்பியோடியுள்ளது.

அதன் பின்னரே அவ்விடத்திற்கு வந்த பொலிஸார், ரவுடிக் கும்பல் போட்டுவிட்டுச் சென்ற வாள்களை மீட்டுள்ளமையுடன், சம்பவம் தொடர்பில் விசாரணையை மேற்கொண்டுள்ளனர்.

இதனால் பருத்தித்துறை நகரை அண்டிய பகுதியில் சிறிது நேரம் பதற்றம் ஏற்பட்டிருந்தது.

---

## ஹரின் பெர்னாண்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இதேவேளை ஹரின் பெர்ணான்டோவை, குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் இன்று முன்னிலையாகுமாறு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

2019ம் ஆண்டு நடத்தப்பட்ட ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காகவே, ஹரின் பெர்ணான்டோ அழைக்கப்பட்டிருந்தார்.

---

## குடாநாட்டில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறைச்சாலையில் – ஐவர்

★ யாழ்.மாநகர சுகாதார அதிகாரி பிரிவு – நால்வர் (தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்கள்)

★ சாவகச்சேரி வைத்திய அதிகாரி பிரிவு – மூவர் (கைதடியில் இயங்கும் அரச திணைக்களத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் ஒருவர் மற்றும் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்த இருவர்)

★ யாழ்.போதனா வைத்தியசாலை – மூவர் (தனிமைப்படுத்தல் விடுதியில் உள்ளவர்கள்)

★ கோப்பாய் வைத்திய அதிகாரி பிரிவு – ஒருவர் (தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்தவர்)

---

## 2ஆம் நாளாகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்ற தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை 98 ஆயிரத்து 570 ஆக அதிகரித்துள்ளது.

---

## கொரோனாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

634 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மொரடுவை பிரதேசத்தை சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவரும், கண்டி பிரதேசத்தை சேர்ந்த 63 வயதுடைய ஆண் ஒருவரும், பேலியகொடை பிரதேசத்தை சேர்ந்த 71 வயதுடைய ஆண் ஒருவரும், கொட்டமுல்லை பிரதேசத்தை சேர்ந்த 76 வயதுடைய ஆண் ஒருவரும் மற்றும் நாரஹேன்பிட பிரதேசத்தை சேர்ந்த 77 வயதுடைய பெண் ஒருவரும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

---

## இரசாயன உரங்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறுநீரக நோய் உட்பட பல தொற்றா நோய்களுக்கு வழிவகுத்துள்ளது என்று சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சிகிச்சைக்காக செலவாகும் தொகை மற்றும் உயிர்களுக்கு ஏற்படும் தாக்கம் அதிகம். ஆரோக்கியமான மற்றும் உற்பத்தித்திறன் வாய்ந்த பிரஜையை உருவாக்கு வதற்கு, நச்சு அல்லாத உணவுக்கான மக்களின் உரிமையை அரசாங்கம் உத்தரவாதம் செய்ய வேண்டும். இந்த நோக்கத்திற்காக நாட்டின் விவசாயத் துறையில் சேதன உரங்களைப் பயன்படுத்துவதற்கு பழக்கப்படுத்த வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டில் சேதன உர உற்பத்தியை அதிகரிக்க அனைத்து தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டும். உர மானியத்திற்கு பதிலாக சேதன உரத்தை பெற்றுக்கொடுக்க திட்டமிடுவதாக ஜனாதிபதி மேலும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய அரசின் ஆளுகைக்குட்பட்ட விடயங்களை பிரதேச சபைகளில் பேசி நேரத்தை வீணடிக்காதீர்

## ஈ.பி.டி.பியின் வேலணை பிரதேச சபை உறுப்பினர் அனுசியா 'அட்வைஸ்'

மத்திய அரசின் விடயங்களை பிரதேச சபைகளில் பேசி சபையின் நேரத்தை வீணடிக்காதீர்கள் என ஈ.பி.டி.பியின் வேலணை பிரதேச சபை உறுப்பினர் அனுசியா ஜெயகாந்த் தெரிவித்துள்ளார்.

அரசியலுக்காகவும் ஒருவர்மீது கொண்டுள்ள காழ்ப்புணர்ச்சியாலும் பேசுவதை விடுத்து யதார்த்த மான விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர் பாகப் பிரதேச சபைகளின் வரையறைக்குள் இருந்து பேசுகின்றமையும் அதனை முன்னெடுப்பதுமே சிறந் தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று (வியாழக்கிழமை) சபையின் உதவித் தவிசாளர் நடனசிகாமணி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் என ஊடகங்களில் வெளி யான மாறுபட்ட செய்தியின் அடிப்படையில் கடற்றொழி லாளர்கள் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்து கண்டன தீர்மானம் ஒன்று சபையின் எதிர்த் தரப்பினரால் முன்வைக்கப்பட்டது. இந்நிலையில், இது தொடர்பிலான விவாதத்தில் கருத்துரைக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனுசியா மேலும் தெரிவிக்கையில் –

இலங்கைக் கடலில் மீன் பிடிக்க இந்திய மீன வர்களுக்கு அனுமதி வழங்கப்படுமென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார் எனக் கூறப்படும்



கருத்து உண்மைக்குப் புறம்பானது.

அது பலதரப்பட்டவர்களிடம் இருந்து வந்த ஆலோசனைகளில் ஒன்று. அதை தீர்மானமாக அவர் தெரிவிக்கவில்லை. இது தன்னிடம் கொண்டுவரப்பட்ட ஆலோசனை மட்டுமே என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

அத்துடன், நடைமுறைப்படுத்த நினைக்கும் யோச னைகளாக முதலில் உளளூர் கடற்றொழிலாளர்கள் மற்றும் கடற்றொழில் அமைப்புக்களிடத்தில் முன் வைத்து, அதுதொடர்பாக விவாதித்து அவர்களிடம் கலந்தாலோசிக்காமல் எந்த முடிவும் எடுக்கப்போவதில்லை என டக்ளஸ் தேவானந்தா உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மாதத்தில் ஒரு தடவை கூட்டப்படும் உள்ளூராட்சி மன்ற சபைகளின் கூட்டத்தில் தேவை யற்ற இந்த விடயத்தை விவாதத்துக்கு உட்படுத்து கின்றமை நேரத்தை வீணடிக்கும் செயலாகவே பார்க்கின்றேன்.

ஊடக செய்திக்காகவும் வாய்ப் பேச்சின் வீரத்தை சபையில் காடடுவதற்காகவும் சபையில் விவாதிக்காது சபையால் மக்கள் நலன்சார்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய பல வேலைத்திட்டங்கள் உள்ள நிலையில் அவைதொடர்பாகஆரோக்கியமானகருத்துக்களையும் தீர்மானங்களையும் கொண்டுவந்து விவாதிப்பதே சிறந்தது.

அத்துடன் மத்திய அரசின், அதுவும் இரண்டு நாடுக ளுக்கிடையிலான ஒரு நீண்டகால விடயத்தை எமது சபையில் கண்டனத் தீர்மானம் எடுப்பதனூடாக தீர்வு காணலாம் என்றால் வேடிக்கையாக உள்ளது.

எனவே, இவ்வாறான நேரத்தை வீணடிக்கும் பேச்சுக்களையும் கண்டனத் தீர்மானங்களையும் விட்டு விட்டு எமது பிரதேச நலன்ட சார் விடயங்களை ஆலோசியுங்கள் அதுவே பிரதேச சபைக்கும் மக்க ளுக்கும் சிறந்ததாகும் என்று உறுப்பினர்களுக்கு புத்திமதி கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஆதன பெயர்மாற்றம்

இல, 212/2 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட 2 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள ஆதனம் யாழ்ப்பாணம் மாநகரசபையால் வரிமதிப்பீட்டு புத்தகத்தில் நீக்லஸ் எதிர்மனசிங்கி பெண் மாதுரி என்ற பெயரில் காணப்படுகிறது.

இவ்வாதனம் பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 03.08.1993 ஆம் திகதி 8853 இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி ஊடாக யாழ்ப்பாணம் இல, 210 பிரதான வீதியிலிருக்கும் ஞானப்பிரகாசம் நல்லையா கைம்பெண் றெபேக்காவினால் தனது மகள் பசுபதி கைம்பெண் பற்றிமாவிற்கு நன்கொடையாக கொடுக்கப்பட்டது.

குறித்த 8853 இலக்க உறுதியின் தாயுறுதி பற்றி குறிப்பிடுகையில் "இவ்வாதனம் 1936 ஆம் ஆண்டிலிருந்து எனது கணவரும் நானும் சிறுவீடு கட்டிக்குடியிருந்து வந்தோ மென்றும், அக்காலத்தில் இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன்பிருந்து யாழ்ப்பாண மாநகரசபைக்கு சோலைவரியும் மின்சாரமும் செலுத்தி வருகிறேனேன்றும், எனது கணவர் காலஞ்சென்ற பின்பு நானே அந்த வீட்டில் எனது பிள்ளைகளுடன் குடியிருந்து வருகி றேனென்றும், அரசாங்கத்தாலோ ஊர்மக்களாலோ எனதாட்சிக்கு எந்த வித தடையும் ஏற்படவில்லையென்றும் ஆகவே இவ்வாதனம் இற்றைக்கு ஐம்பத்தேழு வருடங்களுக்கு மேற்பட்ட எவ்வித தடையுமற்ற எனதாட்சியாகவுடையதென்றும் இதற்கத்தாட்சியாக யாழ்ப்பாணப் பகுதியின் சமாதான நீதிபதி திருமதி.ஏ.சாமிநாதர் அவர்கள் முன்பாக 20.07.1983 திகதியில் என்னால் நிறைவேற்றப்பட்ட சத்தியக்கூற்றுப்பத்திரமொன்று இதன் இணைப்பிரதியுடன் இணைத்திருக்கின்றேன் என்றும் இவ்வாதனம் எவ்வித பாரம் பாராதீனத்திற்குமுட்பட்டு இருக்கவில்லையென்றும் அதை இப்பொழுது நன்கொடையாகக் கொடுக்க எனக்குப்போதிய உரித்திருக்கிறதென்றும் இதனால் வெளியரங்கப்படுத்தி அதைப்பற்றியேதும் பிசகு தடைசோந்தை சம்பவிக்கின் அவற்றை நீக்கிக்கொடுக்கவு முடன்பட்டு இந்த நன்கொடையுறுதி முடித்துக்கொடுக்கிறேன். என குறிப்பிடப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்:-** வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக் குளி கோவிற்பற்று கரையூர் இறை 'மூக்கறைச்சிபள்ளம்' இது உத்தரவு பெற்ற அளவை–யாளர் ஜே.எச்.ஆர்.பேரின்பநாயகம் என்பவர் 26.06.1983 திகதியில் அளந்து வரைந்த 2018 ஆம் இலக்கப்படத்தின் படி நில.பர. 1குளி 10.2 இதில் வடக்குப்பக்கமாக நன்கொடை கொடுக்கப்பட்ட குளி 14.1 நீக்கி மிகுதி தெற்குப்பக்கமாகவுள்ள குளி பதின்னான்கு தசம் ஒன்று குளி 14.1 கிணறும். இதன் எல்லை

**கிழக்கு:-** ஒழுங்கை .

**வடக்கு:-** இராசையா மகேந்திரன் பெண் பிரியதத்த றினோல்டா ஆதனம்.

**மேற்கு:-** சந்தியாக்கோ பெண் றேசலீனுக்குரிய ஆதனம்.

**தெற்கு:-** அந்தோனிப்பிள்ளை மலக்கியாஸீக்குரிய ஆதனம். இதடங்கலும் இன்றும் இக்காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் வடக்கெல்லை காணிக்குரிய அரைவாசிப்பங் கும் இக்காணியின் கிழக்கெல்லையருகால் வழிவாய்க்கால் பாவிப்புரித்தும் புறநீக்கல். இவ்வாதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜெயச்சித்திரா சிறீதரன் முகதாவில் 16.09.2020 ஆம் திகதி 4120 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதிப்படுத்தல் உறுதி ஊடாக இதன் பின்னால் ஆதன அட்டவணையில் விபரிக்கப்படும் ஆதனமானது பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 1993.08.03 ஆம் திகதி 8853 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி எனது நன்கொடை ஆதனமாகும். என்றும் குறித்த உறுதியில் எனது பெயர் பசுபதி கைம்பெண் பற்றிமா என காணப்படுகிறது எனவும். எனது பிறப்பு சான்றிதழிலும், தேசிய அடையாள அட்டையிலும், திருமணச்சான் றிதழிலும் எனது பெயர் பிபியானா எனக் காணப்படுகிறது எனவும் குறித்த இரு பெயர்களும் ஒருவரையே குறிக்கிறது எனவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது பசுபதி கைம்பெண் பிபியானா மறுநாமம் பற்றிமா இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பசுபதி கைம்பெண் பிபியானா மறுநாமம் பற்றிமா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நட வடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப் பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

# மக்கள் வங்கியின் 2020 ஆண்டறிக்கை பிரதமர் மஹிந்தவுக்கு வழங்கி வைப்பு



மக்கள் வங்கியின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை மக்கள் வங்கியின் தலை வர் சுஜீவ ராஜபக்ஷவால் அலரி மாளிகையில் வைத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று (வியாழக்கிழமை) முற்பகல் வழங்கி வைக்கப்பட்டது.

ஆண்டறிக்கையின்படி, மக் கள் வங்கியின் வரிக்கு முந்தைய இலாபம் ரூபா 2,100 கோடி, வரிக்குப் பிந்தைய இலாபம் ரூபா 1,400 கோடி ஆகும். 2020 ஆம் ஆண்டுக்கானமக்கள் வங்கியின் பங்கு இலாபம் ரூபா 350 கோடி எனவும், அரச வரி ரூபா 1,400 கோடி ரூபா என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரச நிதிக் கொள்கையைப் பின்பற்றி மக்கள் வங்கி இந்த ஆண்டில் 2,500 கோடி ரூபா இலாபம் மற்றும் ரூபா 1,500 கோடிக்கும் அதிகமான வரி வரு வாயை எதிர்பார்ப்பதுடன், எதிர் பார்க்கும் பங்கு இலாபம் 300 கோடியாகும்.

குறித்த நிகழ்வில் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பிரதம நிறைவேற்று அதிகாரி ரஞ்சித் கொடிதுவக்கு, நிதி அதிகாரி அசாம் அஹமட் மற்றும் விநியோக நிறைவேற்று அதிகாரி நாலக விஜேவர்தன ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பாதிக்கப்பட்ட ஓய்வூதியதாரர்களின் மாபெரும் ஆர்ப்பாட்டம் 27 ஆம் திகதி

2016 – 2019 வரையான காலப் பகுதியில் ஓய்வுபெற்ற அரச ஊழி யர்களுக்கு 01.01.2020 முதல் வழங்கப்படவேண்டிய அதிகரித்த ஓய்வூதியத்தை ஜனாதிபதி கோட்டாப யவின் தலைமையிலான அமைச் சரவை எவ்வித காரணமும் இன்றி அநீதியான முறையில் இடைநிறுத்தி யது.

இதற்கெதிராக மாபெரும் எதிர்ப்பு பேரணி 2021.04.27 ஆம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு விகாரமஹாதேவி பூங்காவிற்கு முன்னால் நடைபெறவுள்ளது.

நாடாளாவிய ரீதியில் உள்ள பாதிக்கப்பட்ட ஓய்வூதியதாரர்களை அன்றைய இப் பேரணியில் கலந்து கொள்ளுமாறும் அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது என ஓய்வூதியதாரர்க ளின்உரிமைகளைபாதுகாக்கும்தேசிய இயக்கத்தின் உப – தலைவர் ஏ.எல். முகம்மட்முக்தார் தெரிவித்தார்.

# கொரோனாவிலிருந்து 216 பேர் குணமடைவு

நாட்டில் மேலும் 216 பேர் கொரோனாவைரஸ்தொற்றிலிருந்து குணமடைந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் இது வரை கொரோனாத் தொற்றிலிருந்து மீண்டவர்களின் மொத்த எண் ணிக்கை 93 ஆயிரத்து 884ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் இதுவரை யான மொத்த கொரோனாப் பாதிப்பு 98 ஆயிரத்து 50ஆகப் பதிவாகி யுள்ளது. மேலும், கொரோனாவால் உயிரிழந்தவர்களின் மொத்த எண் ணிக்கை 630ஆக உள்ள நிலையில், இன்னும் மூவாயிரத்து 536 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்து சிகிச்சைபெற்று வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# நோய்க்கு மருந்து செய்யுங்கள்!

**நோய்க்கு, அது காட்டும் குணங்குறிக்கு, மருத்துவம் செய்வதில் பலனில்லை. அது நோய்க்குத் தீர்வு தராது. நோயின் விளைவான பாதிப்புகளிலிருந்து மட்டுமே நிவாரணம் தரும்.**

***"நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்"*** **என்றார் செந்நாப்போதகர் திருவள்ளுவர்.**

**நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோயின் காரணம் ஆராய்ந்து, அதைத் தணிக்கும் வழியை ஆராய்ந்து, உடலுக்குப் பொருந்தும் படியாக அதைச் செய்ய வேண்டும் என்பது இதன் கருத்து.**

**இது உடல் நோய்க்கு மட்டுமல்ல, சமுதாயப் பிணிக்கும் கூட பொருந்தக் கூடிய கருத்து.**

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் முடிந்து இரண்டு ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் தாக்குதல் அச்சம் இன்னும் நீங்கவில்லை.**

**மற்றொரு தாக்குதல் நடத்தப்படலாம் என வண. ஓமல்பே சோபித தேரர் கூறுகின்றார்.**

**கத்தோலிக்க ஆலயங்களில் மாத்திரமன்றி வேறு எந்தவொரு மத வழிபாட்டு ஸ்தலங்களிலும் தாக்குதல்களை நடத்தக் கூடும் என்ற சந்தேகம் அவர் மத்தியிலும் காணப்படுகின்றது. அந்த சந்தேகத்தைப் போக்க வேண்டியது தற்போதைய அரசின் கடமையாகும் என்று அனைவர் வலியுறுத்துகின்றார்.**

**இந்த நாட்டின் சிறுபான்மையினரான இஸ்லாமியர்களுக்கு எதிரான பேரினவாத வெறிக் கருத்துகள் பௌத்த, சிங்களத் தரப்புகளிடையே இருந்துதான் அளவு மீறி இப்போது வந்து கொண்டிருக்கின்றன.**

**அதனால் இஸ்லாமியத் தீவிரவாதிகள் இன்னொரு தடவை வெடிகுண்டுத் தாக்குதல்களை நடத்துவார்களாயின் அது கத்தோலிக்க தேவாலயங்களைத் தாண்டி, விகாரைகள் வரை கூட நீளலாம் என்ற அச்சம் தெற்கிலிருந்து இப்படி பிரதிபலிக்கப்படுகின்றது.**

***"இஸ்லாமிய அடிப்படைவாதம் நாட்டிலிருந்து முழுமையாக இல்லாதொழிக்கப்படவில்லை. அடிப்படைவாதிகள் தாக்குதல்களை பௌத்த துறவிகள் போல, வேடமிட்டு வந்து முன்னெடுக்கலாம்."***

**பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் இப்படிக் கூறியிருக்கின்றார்.**

**இஸ்லாமியத் தீவிரவாதப் பிரச்சினை தொடர்பில், நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி மருத்துவம் செய்யப்படவில்லை.**

**மாறாக நோய்க்கான காரணங்களை இன்னும் மோசப்படுத்தி, நிலைமையை எல்லை மீற வைக்கும் மேலாதிக்கம் என்ற மருத்துவமே இங்கு முன்னெடுக்கப்படுகின்றது.**

**படை நடவடிக்கைகள், அடக்குமுறைகள், அதிகார அட்டூழியங்கள் மூலம் இனமுரண்பாடு என்ற நோயை இன்னும் மிக மோசமாக முன்னெடுக்க வைக்கும் கைங்கரியமே இங்கு மேற்கொள்ளப்படுகின்றமை விசனத்துக்குரியதாகும்.**

***"ஈஸ்டர் தாக்குதலைப் போன்ற ஒரு தாக்குதல் இனி நடக்காது. அதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்"*** **என ஜனாதிபதியின் சகோதரரும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகருமான பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

**அவரது உறுதி மொழி கூட நோயின் வெளிப்பாட்டை கட்டுப்படுத்தும் நடவடிக்கை பற்றியதே தவிர, நோய் வராமல் தடுக்கும் சிகிச்சையின் அடிப்படையிலான உறுதிமொழி அல்ல.**

**மதங்களுக்கு இடையிலும், மக்களுக்கு இடையிலும், முரண்பாடுகளும், நம்பிக்கையீனங்களும், அடக்குமுறை, அடாவடித்தனங்களும் நீடிப்பதே இத்தகைய இன மற்றும் மத வன்முறை நடவடிக்கைகள் கட்டவிழப் பிரதான காரணமாகும்.**

**மதங்களும், இனங்களும் ஒன்றையொன்று அடக்காமலும், ஒன்று மற்றதின் மீது ஆதிக்கத்தைச் செலுத்தாமலும் சுமுகமாகப் புரிந்துணர்வுடன் – விட்டுக் கொடுப்புடன் – பரஸ்பரம் நம்பிக்கையுடன் – செயற்படும் தேசத்தில் இத்தகைய வன்முறைகள், இன மத குழுக்களை இலக்கு வைத்த தாக்குதல்கள் இடம்பெறா என்பது தெளிவானது.**

**இத்தகைய தாக்குதல்களை பாதுகாப்பு ஏற்பாடுகள் மூலம் தடுப்பது என்பது நோயின் வெளிப்பாட்டுக்கு மருத்துவம் செய்வது போன்றது.**

**அத்தகைய நிலைமை ஏற்படாதவாறு – இன, மத குழுமங்களுக்கு இடையில் வெறுப்புணர்வும், முன் விரோதமும், முரண்பாடுகளும் ஏற்படாத வகையில் – புரிந்துணர்வையும், பரஸ்பரம் நம்பிக்கையையும், விட்டுக்கொடுப்பையும் ஏற்படுத்தும் முயற்சியை முன்னெடுப்பது நோய்க்கான காரணத்தைத் தேடிக் கண்டுபிடித்து மருத்துவம் செய்வது போன்றதாகும்.**

**இன்றைய நிலையில் அதுதான் அத்தியாவசியமானது. நிரந்தரத் தீர்வாகக் கூடியது. ஆனால் நோயை விட்டு, நோய் காட்டும் குணங் குறிக்கு மருத்துவம் செய்யும் போக்கு இலங்கையில் இன்றும் – இன்னும் – தொடர்கின்றது என்பதே இங்குள்ள அபத்த நிலைமையாகும்.**

# தேசிய வெசாக் நிகழ்வுகள் திட்டமிட்டவாறு நயினாதீவில்

## யாழ்.அரச அதிபர் திட்டவட்டம்

தேசிய வெசாக் நிகழ்வுகள் திட்டமிட்டவாறு நயினாதீவு நாக விகாரையில் இடம்பெறும் என யாழ்.மாவட்ட செயலர் க. மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் எதிர்வரும் நாள்களில் கொரோனாத் தொற்று அதிகரிக்கும் அபாயம் உள்ளது என யாழ்.மாவட்ட செயலகத்தில் நாக விகாரையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். அதன் போது ஊடகவியலாளர், தேசிய வெசாக் நிகழ்வுகள் நடைபெறுமா? எனக் கேள்வி எழுப்பி இருந்தார். அதற்கு பதில் அளிக்கும் போதே அவ் வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

தேசிய வெசாக் நிகழ்வு என்பது தேசிய நிகழ்வு. அதனை நிறுத்துவது தொடர்பில் எமக்கு எந்த அறிவுறுத்தலும் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. அதனால் நிகழ்வு முன்னர் திட்டமிட்டவாறு நடைபெறும்.

சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றி , மட்டுப்படுத்தப்பட்டவர்களுடன் தேசிய வெசாக் நிகழ்வுகள் நடைபெறும் எனத் தெரிவித்தார்.



தேசிய வெசாக் நிகழ்வுகள் எதிர்வரும் மே மாதம் 23 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரையில் நயினாதீவு நாக விகாரையில் நடைபெறவுள்ளது. 24 ஆம் திகதி சிறப்பு நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, எதிர்வரும் மூன்று வார கால பகுதி எச்சரிக்கை மிக்க காலப் பகுதி எனவும், சுற்றுலா பயணங்களை தவிர்க்குமாறும், பண்டிகை நிகழ்வுகளை நிறுத்துமாறும் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்' என்பது குறிப்பிடத்தக்கது.

# 2022 இற்கான பாடசாலை சீருடைத் துணிகள் உள்நாட்டு உற்பத்தியாளர்களிடம் விநியோகம்

2022 ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடைத் துணிகளை விநியோகிக்கும் பொறுப்பை உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உள்நாட்டு உற்பத்தியாளர்களை ஊக்குவித்து பாடசாலை சீருடைத் துணிகளை அவர்களிடமிருந்து கொள்வனவு செய்ய அமைச்சரவை ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி கைத்தொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள உள்நாட்டு ஆடை உற்பத்தியாளர்களிடம் அதற்கான விலை மட்டங்களைக் கோரி விநியோகஸ்தர்களை தெரிவுசெய்வதற்குமுடிவுசெய்யப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்திற்கான பாடசாலைச் சீருடைத் துணிகளை இந்த வருட இறுதி பாடசாலைத் தவணைக்கு முன்னர் மாணவர்களுக்கு வழங்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் முன்வைத்த இந்த யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முகக்கவசம் அணியாமல் வருபவர்களுக்கு பொருள்களை விற்பனை செய்ய வேண்டாம்

## கல்முனை மாநகர பொதுச்சந்தை வர்த்தக சங்கம் அறிவிப்பு

நோன்பு காலத்தில் முகக்கவசம் அணியாமல் வருபவர்களுக்கு பொருள்களை விற்பனை செய்ய வேண்டாம் என்பதை கண்டிப்பாக குறிப்பிட்டுள்ளோம். அதே போன்று நுகர்வோரிடம் வர்த்தக நிலையத்தில் பொலித்தீன் பாதுகாப்பு மற்றும் முகக்கவசம் இன்றி உள்ள வர்த்தகர்களிடம் பொருள்களை கொள்வனவு செய்ய வேண்டாம் எனக் கூறியுள்ளோம்.

நோன்பு காலத்தில் தொடர்ச்சியாக இதனைசெயற்படுத்தநாம்சகலதரப்பினரின் ஒத்துழைப்பினை நாடியுள்ளோம் என கல்முனை மாநகர பொதுச்சந்தை வர்த்தக சங்க பிரதிச்செயலாளர் எஸ்.எல். ராயீஸ் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறை மாவட்டம் கல்முனை பொதுச் சந்தை வர்த்தக சங்க அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை மாலை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

கடந்த காலங்களில் கொரோனாத் தடுப்பு முன்னெடுப்புகளில் எம்மோடு இராணுவத்தினர், கல்முனை பொலிஸார், கல்முனை பிராந்திய சுகாதாரப் பிரிவினர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆகியோர் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக கொரோனாத் தடுப்பை மேற்கொண்டிருந்தோம்.

இது போன்று இனிவரும் காலங்களிலும் இவர்களின் ஒத்துழைப்புடன் கொரோனாத் தடுப்பு முன்னெடுப்புகளை தொடர்ந்து செயற்படுத்துவோம். எமது பொதுச்சந்தை கொரோனா அனர்த்தம் காரணமாக மாதக் கணக்கில் மூடப்பட்டிருந்தது.

தற்போது எமது நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் மீண்டும் 3 ஆவது அலையாக உருவாகி இருக்கின்றது என்பதை சுகாதாரப் பிரிவினால் அறியப்பெற்றிருந்தோம். இந்த கொரோனா வைரஸ் தடுப்பு சம்பந்தமாக ஏற்கனவே எவ்வாறான தடுப்பு செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம்.

அது மாத்திரமன்றி கடந்த காலங்களில் கல்முனை பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர் ஜி.சுகுணனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சிறப்பாக தடுப்பு நடவடிக்கைகளை கையாண்டு வந்தோம்.

தற்போது மீண்டும் 3 ஆவது கொரோனா அலை உருவாகும் இந்த சந்தர்ப்பத்திலும் தடுப்பு செயற்பாட்டை முன்னெடுக்கவுள்ளோம்.எமது சந்தைத் தொகுதியில் சுகாதார நடைமுறைகளை எவ்வாறு நுகர்வோர் வர்த்தகர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை கை ஒலிபெருக்கி ஊடாகவும் பொருள்களை எவ்வாறு பாதுகாப்பாக பெறுதல் என்பதை தினந்தோறும் நாங்கள் அறிவித்துக் கொண்டு வருகின்றோம்.அது மாத்திரமன்றி எமது சங்கத்தால் சுவரொட்டி ஊடாக அறிவுறுத்தல்களை வழங்கி காட்சிப் படுத்தி வைத்திருக்கின்றோம்.

கடந்த காலங்களைப் போன்று மாநகர சபையின் உதவியுடன் தண்ணீர் பவுஸர்களைக் கொண்டு நுகர்வோருக்குக் கைகழுவுதல்செயற்பாட்டைசெயற்படுத்தியுள்ளோம். முகக்கவசத்தை முறையாக அணிய வேண்டும் என்பதை அறிவுறுத்தி வருகின்றோம்.

அதாவது வர்த்தகர்கள், நுகர்வோர்கள் வாய், மூக்கு மூடப்பட்டுள்ள நிலையில் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும்.இது சம்பந்தமாக எமது வர்த்தகர்களை அறிவுறுத்தியுள்ளோம்.அதாவது பொருள்களை கொள்வனவு செய்ய வரும் மக்கள் முறையாக முகக்கவசம் அணியாது வந்தால் பொருள்களை விற்பனை செய்ய வேண்டாம் என்பதைக் கண்டிப்பாகக் குறிப்பிட்டுள்ளோம்.

அதே போன்று நுகர்வோரிடம் வர்த்தக நிலையத்தில் பொலித்தீன் பாதுகாப்பு மற்றும் முகக்கவசம் இன்றி உள்ள வர்த்தகர்களிடம் பொருள்களை கொள்வனவு செய்ய வேண்டாம் எனக் கூறியுள்ளோம்.நோன்பு காலத்தில் தொடர்ச்சியாக இதனை செயற்படுத்தநாம்சகலதரப்பினரின் ஒத்துழைப்பை நாடியுள்ளோம். – எனக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிக்கு போன்று வேடமிட்டு தாக்குதல் நடத்தலாம்; இஸ்லாமிய அடிப்படைவாதம் புற்றுநோய் போன்றது

## என்கிறார் ஞானசார தேரர்

இஸ்லாமிய அடிப்படைவாதம் நாட்டிலிருந்து முழுமையாக இல்லாதொழிக்கப்படவில்லை. அடிப்படைவாதிகள் தாக்குதல்களை பௌத்த துறவிகளை போல் வேடமிட்டும் முன்னெடுக்கலாம்.

குண்டுத்தாக்குதலின் உண்மை சூத்திரதாரியை எதிர்த்தரப்பினர் அறிந்திருப்பார்களாயின் நாட்டு மக்களுக்கு உண்மையைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

பொதுபல சேனா அமைப்பின் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்று இரண்டு ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளன. இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பாக 2010 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இருந்து பல விடயங்களைக் குறிப்பிட்டோம்.

அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக முஸ்லிம் அரசியல் தலைவர்களும், ஆட்சியில் இருந்த அரச தலைவர்களும் இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.

மாறாக, எம்மை அடக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இஸ்லாமிய அடிப்படைவாதம் தொடர்பில் அலட்சியப் போக்கில் செயற்பட்ட பொறுப்பில் இருந்த அனைத்துத் தரப்பினரும் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதலுக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தை அரசியல்வாதிகள் தங்களின் குறுகிய அரசியல் தேவைக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். குண்டுத்தாக்குதல் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியினரும், ஐக்கிய மக்கள் சக்தியினரும் தற்போது போர்க்கொடி தூக்குகின்றமை வேடிக்கையானது.

மக்கள் விடுதலை முன்னணியினர் 2018 ஆம் ஆண்டு இஸ்லாமிய அடிப்படைவாதிகளுடன் தொடர்புகொண்டு பல செயற்திட்டங்களை நாடு தழுவிய ரீதியில் முன்னெடுத்தார்கள். மக்கள் விடுதலை முன்னணியின் தேசியப் பட்டியல் உறுப்பினரான இப்பராஹிம் தற்கொலை குண்டுதாரிகளின் தந்தையாவார் . இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கும், தமக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என மக்கள் விடுதலை முன்னணியினர் குறிப்பிட முடியாது.

குண்டுத்தாக்குதலின் இரண்டாம் வருட நிறைவை முன்னிட்டு சஜித் பிரேமதாஸ உட்பட எதிர்க்கட்சியினர் கறுப்பு ஆடை அணிந்து நாடாளுமன்றில் ஆக்ரோஷமாக கருத்துரைப்பதைக் காணக் கூடியதாக முடிந்தது. சர்வதேச மட்டத்தில் தடை செய்யப்பட்ட இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தொடர்பு வைத்துள்ளார். 2018 ஆம் ஆண்டு இலங்கையில் கட்டார் சரிட்டி எனும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

சர்வதேச மட்டத்தில் செயற்பட்ட மற்றும் தற்போது செயற்படுகின்ற பயங்கரமான இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களுக்கும், பயங்கரவாதிகளுக்கும் கட்டார் சரிட்டி அமைப்பு நிதியுதவி வழங்கியுள்ளது. இந்நிறுவனம் இலங்கையில் செயற்படும் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களுக்கு நிதியுதவி வழங்கியுள்ளது.

இஸ்லாமிய அடிப்படைவாதக் கொள்கைக்கு ஈர்க்கப்பட்டவர்களுக்கு புனருத்தாபனம் வழங்குவதுடன் இஸ்லாமிய அடிப்படைவாத விளைவுகள் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கும், மக்கள் விடுதலை முன்னணியினருக்கும் பாடம் புகட்டவேண்டும்.

இவர்கள் தங்களின் குறுகிய அரசியல் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இஸ்லாமிய அடிப்படைவாதிகள் நல்லாட்சி அரசாங்கத்தை இயக்கினார்கள். அரச ஆதரவுடன் இஸ்லாமிய அடிப்படைவாதம் தலைத்தூக்கியது.



ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தைக் கொண்டு மெல்கம் ரஞ்சித் கர்தினால் ஆண்டகை அரசாங்கத்திற்கு தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகிக்கிறார்.

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கைது செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுக் கொள்கிறார். ஆனால் குண்டுத்தாக்குதலுக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் தொடர்பில் எவ்விடத்திலும் இவர் குறிப்பிடவில்லை.

பயங்கரவாதி சஹ்ரான் 2019 ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி குண்டுத்தாக்குதலை முன்னெடுப்பதற்கு முன்னர் அடிப்படைவாத செயற்பாடுகளைப் பகிரங்கமாக முன்னெடுத்துள்ளார்.

வவுணதீவு போக்குவரத்து பொலிஸார் கழுத்தறுத்து கொலை, மாவனெல்லை புத்தர் சிலை உடைப்பு சம்பவம், சஹ்ரான் தொடர்பாகத் தகவல் கொடுத்த தஸ்லின் தாக்கப்பட்டமை, தாளம் குடாவில் வெடிகுண்டு ஒத்திகை, வனாத்தவில்லு பிரதேசத்தில் பெருந்தொகையான வெடிபொருள்கள் கைப்பற்றப்பட்டமை ஆகிய சம்பவங்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் முறையாக விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தால் ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம் பெற்றிருக்காது.

அனைத்துத்தரப்பினரது பொறுப்பற்ற தன்மையை அடிப்படைவாதிகள் தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டார்கள். ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு பல விடயங்களை அறிக்கையில் உள்ளடக்கியுள்ளது.

பல விடயங்கள் தற்போதும் செயற்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அரசாங்கத்துக்குத் தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகிப்பது பயனற்றது. தேவையற்ற அழுத்தங்கள் உண்மையான குற்றவாளியைக் காப்பாற்றும்.

குண்டுத்தாக்குதல் சம்பவத்தின் உண்மையான குற்றவாளியை தாம் அறிவதாக எதிர்கட்சியினர் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகவே இவ்விடயம் தொடர்பாக உண்மைக் காரணியை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும்.

இஸ்லாமிய அடிப்படைவாதம் புற்றுநோய் போன்றது. அதனை விரைவாக இல்லாதொழிக்க முடியாது பொறுமையுடன் கையாள வேண்டும். இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்கள் மாத்திரமே தடை செய்யப்பட்டுள்ளன. அந்த அமைப்புக்களின் கொள்கைகள் வியாபித்துள்ளன. ஆகவே, அடிப்படைவாதிகள் எந்நேரத்திலும் தாக்குதல்களை முன்னெடுக்கலாம்.

இஸ்லாமிய அடிப்படைவாதிகள் பௌத்த துறவி போன்று வேடமிட்டும் தாக்குதல்களை நடத்தலாம். மீகலாவ பிரதேசத்தில் ஒருவர் பௌத்த பிக்கு போல் வேடமிட்டு பௌத்த விகாரைக்கு வந்த சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே பௌத்த பிக்குகளை கருவி–யாகக் கொண்டு தாக்குதல்கள் இடம் பெறலாம். ஆகவே அனைத்துத் தரப்பினரும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். – என்றார்.

## விபத்துக்குள்ளான நிலையில் கடத்தப்பட்ட வாகனம் வவுனியாவில் பொலிஸாரால் மீட்பு இளைஞன் கைது



வவுனியா, இலுப்பையடிக்கு அண்மித்த குடியிருப்பு பகுதியில் வைத்து கடத்தப்பட்ட சிறிய ரக வாகனம் வவுனியா பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், குறித்த சம்பவம் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது –

வவுனியாவிலுள்ள வர்த்தக நிலையங்களுக்குப் பொருள்களை விநியோகம் செய்யும் சிறிய ரக வாகனம் ஒன்றை நிறுத்தி விட்டு பொருள்களை விநியோகம் செய்து கொண்டிருந்த போது அங்கு வந்த நபர் ஒருவர் இயங்கு நிலையில் இருந்த குறித்த வாகனத்தை எடுத்துக் கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து விநியோகஸ்தர்களால் வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பில் அவர்கள் தீவிர விசாரணைகளை ஆரம்பித்திருந்தனர்.

இந்நிலையில், அங்கிருந்து வாகனத்தை எடுத்துச் சென்ற நபர் வவுனியா, மன்னார் வீதி வழியாக குருமன்காடு பகுதியில் பயணித்த போது மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற போக்குவரத்து பொலிஸார் மோட்டர் சைக்கிளில் பயணித்த நிலையில் காயமடைந்தவரை, வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், குறித்த வாகனத்தையும் அதனை செலுத்தி வந்த சாரதியையும் கைது செய்து வவுனியா பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

இதன்போது குறித்த வாகனமே கடத்தப்பட்டதாகக் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டதையடுத்து, குறித்த வாகனம் மீட்கப்பட்டுள்ளதுடன், அதனைக் கடத்தினார் என்ற சந்தேகத்தின் பேரில் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய இளைஞர் ஒருவரையும் வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த கடத்தல் மற்றும் விபத்து சம்பவங்கள் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரும், போக்குவரத்து பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளமையுடன், சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## இருநாள் உத்தியோகபூர்வ விஜயமாக சீனப் பாதுகாப்பு அமைச்சர் வருகை

சீனப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் வெய் ஃபெங் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இரு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வருகின்றார்.

இரு தரப்பு இராஜதந்திர நிரலுக்கமைவாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட பாதுகாப்பு துறைசார் முக்கியஸ்தர்களையும் சந்தித்து சீன பாதுகாப்பு அமைச்சர் கலந்துரையாடவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



## தரைவழி வாகனம் மோதியதால் ஸ்ரீலங்கன் ஏயர்லைன்ஸ் விபத்து



மாலைதீவின் சுற்றுலா தளமான பிரதான சர்வதேச நுழைவாயிலான மாலே சர்வதேச விமான நிலையத்தில் வைத்து ஸ்ரீலங்கன் ஏயர் லைன்ஸ் நிறுவனத்தின் 'ஏ320என். இ.கியு' என்ற விமானம் சேதமடைந்தது.

4ஆர்–ஏ.என்.பி.எனபதிவுசெய்யப்பட்ட நான்கு ஆண்டு பழைமையான இந்த விமானம், இந்தியப் பெருங்கடல் முழுவதும் அதன் பயணத்தில் இருந்தபோது மாலே சர்வதேச விமான நிலையத்தின் தரைசேவை வாகனத்துடன் தற்செயலாக நேற்று முன்தினம் புதன்கிழமை மோதியமையால் சேதத்துக்குள்ளாகியுள்ளது.

புதன்கிழமை பிற்பகல் 13:13 மணியளவில் கொழும்பிலிருந்து புறப்பட்ட இந்த விமானம் ஒரு மணிநேரம் ஒன்பது நிமிட பயணத்திற்கு பின்னர் மாலேயை சென்றடைந்துள்ளது.

இந்த சம்பவம் எவ்வாறு நிகழ்ந்தது என்பது பற்றி மேலதிக விவரங்களை அறிய இலங்கை ஏயர்லைன்ஸ் நிறுவனம் மாலே சர்வதேச விமான நிலையத்தை அணுகியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# 28 ஆண்டுகளாக இயங்கிய கல்முனை வடக்கு செயலகத்தை உடன் வர்த்தமானிப்படுத்தி பிரதேச செயலாளரை நியமிக்குக!

## நாடாளுமன்றில் கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்தல்

28 வருடங்களாக இயங்கிவந்த கல்முனை பிரதேச செயலகத்தை, பிரதேச செயலாளர் பணியகத்துக்குரிய அங்கீகாரத்தை வழங்கி பிரதேச செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிடில் அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகவே அது கருதவேண்டியுள்ளது.

– இவ்வாறு நாடாளுமன்றில் காட்டத்துடன் தெரிவித்தார் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில் –

உள்நாட்டு விவகார அமைச்சு இம்மாதம் 8 ஆம் திகதி அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்குக் கடிதம் மூலம் ஓர் அறிவிப்பைச் செய்துள்ளது. அதாவது கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணிமனையை கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் பணிமனையின் உப பணியகமாகக் கருதுமாறு அந்தக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. இன்னொரு வகையில் கூறுவதானால் இது கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகத்தை தரமிறக்கும் நடவடிக்கையாக அமைந்துள்ளது. 1993 ஆம் ஆண்டு தனியான பிரதேச செயலாளர் பணியகமாக உருவாக்கப்பட்டிருந்த இந்தப் பணியகம் தற்போது கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் பணியகத்தின் உப பணியகமாகத் தரமிறக்கப்பட்டுள்ளது. அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு 9 ஜூலை 1993 வெளியிட்ட ஆவணத்தின்படி, அமைச்சரவை பத்திரம் 93/600/034(1) சமர்ப்பிக்கப்பட்டு அமைச்சரவையின் உடன்பாடு பெறப்பட்டதன் அடிப்படையில் 28 ஜூலை 1993 இல் கல்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் செயலகம் என அதுவரை அழைக்கப்பட்டுவந்த பணியகம் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகம் என மாற்றப்பட்டது. கடந்த 28 வருடங்களாக கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகம் இயங்கிவருகிறது. அன்றிலிருந்து எட்டு பிரதேச செயலாளர்கள் நியமிக்கப்பட்டார்கள். பின்னர் கெடுவாய்ப்பாக அரசியல் தலையீடுகள் காரணமாக இப்பணியகத்திற்கு பிரதேச செயலாளர்களுக்குப் பதிலாக உதவி பிரதேச செயலாளர்களே நியமிக்கப்பட்டார்கள். இருந்த



போதிலும் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகம் அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 பிரதேச செயலாளர் பணியகங்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நாட்டிலுள்ள இதர பிரதேச செயலகங்கள்போன்று அதனை முறைப்படி தனியான பிரதேச செயலாளர் பணியகமாக அங்கீகரித்திருந்தது. கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகத்தின்கீழ் 29 கிராமசேவையாளர் பிரிவுகள் உள்ளன. அந்தப் பிரதேச பணியகத்தின் ஆட்புல எல்லைக்குள் ஏறத்தாழ முப்பத்தொன்பதாயிரம் மக்கள் வாழ்கின்றனர். 22 ஆயிரத்து 605 மக்கள் வாக்காளராகப் பதிவு செய்துள்ளனர்.

இங்கு 39 ஆயிரத்து 300 தமிழர்கள், 3 ஆயிரம் முஸ்லிம்கள், 125 சிங்களவர்கள் வாழ்கின்றனர். வாக்காளர் பதிவேடுகளிலும் கல்முனை வடக்கு தனியான பிரதேச சபை பணியகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிறப்பு இறப்பு பதிவு திணைக்களமும் இந்தப் பிரதேச செயலாளர் பணியகத்தை தனியான பணியகமாக ஏற்றுக்கொண்டுள்ளது. காணிகளைப் பதிவு செய்யும் பணியகமும் அவ்வாறே அடையாளப்படுத்துகிறது. அச்செயலகத்தின் கீழ் 235 ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். எல்லா அமைச்சகங்களும் இதனைத்தனியான பிரதேச செயலாளர் பணியகமாகவே கணிக்கின்றன. அபிவிருத்தி நிதி ஒதுக்கீடுகள் செய்யும்போதும் இது தனியான பிரிவாகவே கணிக்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டங்களும் இதனை தனியான பிரிவாகக் கணித்து வேறாகவே கூட்டங்களை நடத்திவருகின்றன. நடைமுறையில் இவ்வாறிருந்தாலும் அரசியற் காரணங்களால் கடந்த 28 வருடங்களாக இந்தப் பணியகத்தின் உருவாக்கம் பற்றிய வர்த்தமானி அறிவித்தல் மேற்கொள்ளப்படவில்லை. இன்று அதனைக் காரணங்காட்டி இத்தரமிறக்கும் நடவடிக்கையை நியாயப்படுத்த முனைகிறார்கள். இது முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட முடியாத நடவடிக்கை. இன்று இயங்கிவரும் பல பிரதேச செயலாளர் பணியகங்களின் உருவாக்கம் பற்றி வர்த்தமானி அறிவுறுத்தல்கள் மேற்கொள்ளப்படவில்லை.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கோரளைப் பற்று மத்தி பிரதேச செயலாளர் பணியகம் 2002 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வந்தாலும் அதுதொடர்பான வர்த்தமானி அறிவிப்பு மேற்கொள்ளப்படவில்லை. வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பணியகம் பற்றிய வர்த்தமானி அறிவித்தல் மேற்கொள்ளப்படவில்லை. அப்படியிருக்க கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகம் விடயத்தில் இப்பாகுபாடு காட்டப்படுவது ஏன்? இதனை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த பிரதேச செயலாளர் பணியகத்தின் ஆட்புல எல்லைக்குள் வாழ்பவர்கள் பெரும்பாலும் முழுமையாகவே தமிழர்கள் என்பதால் இப்பாகுபாடு காட்டப்படுகிறதா? இதுதான் காரணமா? இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இந்த அவசரத்தை உணர்ந்து உள்துறை செயலகத்தின் இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டுவந்து ஏப்ரல் 8 திகதி அனுப்பிய கடிதத்தை மீளப்பெற்று கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் பணியகத்தை முறைப்படி வர்த்தமானி அறிவுறுத்தலைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அந்தப் பிரதேச செயலாளர் பணியகத்துக்கு அதற்குரிய அங்கீகாரத்தை வழங்கி பிரதேச செயலாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிடில் அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியாகவே கருதவேண்டியுள்ளது.

ஆகவே இந்த விடயத்தில் அமைச்சர் விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். – என்று தெரிவித்தார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் சிறுபான்மையினரை இலக்கு வைப்பதற்குப் பயன்படுத்தப்படக் கூடாது

## சர்வதேச மன்னிப்புச்சபை கோரிக்கை

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள்தொடர்பில்உரியவிசாரணைகளை முன்னெடுத்து, குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. எனினும் சிறுபான்மையினரை இலக்குவைத்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு மிகவும் மோசமானபயங்கரவாதத்தடைச்சட்டம்பயன்படுத்தப்படக்கூடாது என்று சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் இடம்பெற்று இருவருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அதனை முன்னிட்டு சர்வதேச மன்னிப்புச்சபையால் அதன் உத்தியோக பூர்வடுவிட்டர்பக்கத்தில்வெளியிடப்பட்டுள்ள பதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தப் பதிவில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கையில் சுமார் 250 இற்கும் அதிகமானோரைக் காவுகொண்ட ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதல்கள் இடம்பெற்று இருவருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன. அந்தக் குண்டுத் தாக்குதல்களில் தமது அன்பிற்குரியவர்களை இழந்தவர்களுக்கு எமது இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

அதேவேளை எந்தவொரு சமூகத்தையும் அடக்குமுறைக்கு உட்படுத்தக்கூடிய வெறுப்புணர்விற்கு எதிராக ஒன்றுபட வேண்டும்.

இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுப்பதுடன் குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உள்ளது. அந்த விசாரணை சர்வதேச தரத்துக்கு அமைவாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை, விமர்சகர்களையும் சிறுபான்மையினரையும் இலக்கு வைத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எவ்வித விசாரணைகளுமின்றி அவர்களைத் தன்னிச்சையாகத் தடுத்து வைப்பதற்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் போன்ற மிகவும் மோசமான சட்டத்தை அரசாங்கம் பயன்படுத்தக்கூடாது.

அதனைமறுபரிசீலனைசெய்வதற்கும்முடிவிற்குக்கொண்டுவருவதற்கும் இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மன்னிப்புச்சபை வலியுறுத்தியுள்ளது.

# 10 மணித்தியாலத்திற்குள் தீர்வின்றேல் போராட்டம்

## திருநாவற்குளம் கிராம மக்கள் காலக்கெடு

திருநாவற்குளம் பாதுகாப்பற்ற ரயில் கடவைக்கு எதிர்வரும் 10 மணித்தியாலங்களில் பாதுகாப்பு ஊழியர் ஒருவரை நியமிக்கத்தவறின், வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை காலை மேற்படி கடவையில் இடம்பெற்ற ரயில் விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாகப் பொதுமக்கள் கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் –

திருநாவற்குளம்பாதுகாப்பற்றரயில்கடவையில் பணியில் ஈடுபட்டு வந்த காவலாளிக்கு பொலிஸாரால்வழங்கப்படும்கொடுப்பனவு வழங்கப்படாத நிலையில் அவர் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதத்தில் இருந்து பணியில் ஈடுபடுவதை நிறுத்தியுள்ளார்.

தற்போது பலமாதங்களாக குறித்த கடவைக்கு பாதுகாப்பு ஊழியர் ஒருவர் நிறுத்தப்படவில்லை.

அந்தக் கடவை நகரை அண்டி இருக்கின்றது. தினமும் அதிகமான மக்கள் அதனைப் பயன்படுத்தி வருகின்றமையுடன், ரயில் வருவதை இலகுவில் அறிந்துகொள்ள முடியாத அபாயகரமான ஒரு பகுதியாக அது இருக்கின்றது.

குறித்த பாதுகாப்பற்ற கடவைக்கு ஊழியர் ஒருவரை நியமிக்குமாறு நாம் பலமுறைகோரிக்கையை விடுத்தும் அது பொலிஸாராலும், ரயில் திணைக்களத்தாலும் நிறைவேற்றப்படாமல் தட்டிக்கழிக்கப்பட்டு வருகின்றது.

எனவே, நேற்றுக் காலையில் இருந்து பத்து மணித்தியாலங்கள் கால அவகாசத்தை நாம் பொலிஸாருக்கு வழங்குகின்றோம். அதற்குள் குறித்த கடவைக்கு பாதுகாப்பு ஊழியர் ஒருவர் நியமிக்கப்படாது விடின் பொதுமக்கள் அனைவரும் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபடுவோம் எனத் தெரிவித்தனர்.

# யாழ்.நகரப்பகுதியில் கிருமித் தொற்று நீக்கி மருந்து விசுறும் செயற்பாடு முன்னெடுப்பு

இராணுவத்தினரால் யாழ். நகரப்பகுதிச் சுத்தமாக்கி கிருமித் தொற்று நீக்கி மருந்து விசுறும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகரப் பகுதியில் அண்மையில் அதிகளவானோர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகிய யாழ்ப்பாண நகரின் பஸார் வீதிப் பகுதி இராணுவத்தினரால் நீரூற்றி கழுவப்பட்டு கிருமித் தொற்று நீக்கும் மருந்து விசிறும் செயற்பாடு நேற்று (வியாழக்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்டது.

இராணுவத்தின் 51 ஆவது படையணி கட்டளை அதிகாரியின் வழிகாட்டலில் 512 ஆவது படைப்பிரிவினரால் குறித்த செயற்பாடு இன்று காலை முன்னெடுக்கப்பட்டது. யாழ்ப்பாண நவீன சந்தை பஜார் வீதி நீர் ஊற்றி கழுவப்



பட்டதோடு கிருமித் தொற்று நீக்கி மருந்து விசுறும் செயற்பாடும் முன்னெடுக்கப்பட்டது.

நகரப்பகுதியைச் சுத்தமாக்கும் செயற்பாட்டில் இராணுவத்தின் 51 ஆவது படையணியின் தளபதி மற்றும் 512 ஆவது படைப்பிரிவின் தளபதி மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் இராணுவ வீரர்கள் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 06 கோணமலை காளி ஆச்சி தரிசிப்போம் வாரீர்!

- வே.வரதசுந்தரம் -

**நோய்பிணி தீர**
**நோன்பு காத்தோம்**
**ஆடீர் ஊஞ்சல்**
**ஆச்சிநீ காளி!**

**நகர்வலம் சென்று**
**தீர்த்தம் ஆடி**
**திருவருள் தாராய்**
**ஆச்சிநீ காளி!**

**தேர்வடம் பிடித்து**
**நேர்கடன் செய்வோம்**
**நினைப்பது தாராய்**
**ஆச்சிநீ காளி!**

இவ்வாறு பாடி, காளி ஆச்சியை ஏத்தியேத்தித் தொழுத அடியார்கள், இவ்வாலயத்தில் அம்பாள் உவந்தேறி உலாவரும் ஊர்திகள் பற்றிச் சிந்திக்கின்றனர்.

அம்பாள் உவந்து ஏறும் ஊர்தி சிங்கம். குண்டலினி சக்தியைக் குறிக்கும் நாகமும் அம்பாளுக்குரிய ஊர்தி. அது நாகவாகனம். அன்ன வாகனமும் அவ்வாறே. நீரை நீக்கிப் பாலைக் குடிக்கும் அன்னம் போல் எம்மை உலகியல் பாசவினைகளில் இருந்து மீட்டு மேலான வாழ்வு தருபவள் அம்பாள். எனவே அன்னமும்அம்பாளுக்குரிய ஊர்தி.

யானையை பராமரிக்கும் யானைப்பாகன் அங்குசத்தினால் அதனை அடக்கி ஆள்வது போன்று, உரன் என்னும் மனவுறுதியுடன் ஐம்பொறிகளை நாம் ஆற்றுப்படுத்த வேண்டும். இந்தக் கருத்தை விளக்க அம்பாள் யானையில் உலாவருவாள். குதிரை அளவற்ற ஆசைகளைக் குறிக்கும். அவற்றைக் கட்டுப்படுத்தி அருள்புரிபவள் அம்பாள். ஆசை அறுமின்கள் என்று போதிக்குமாறு குதிரையில் அம்பாள் உலா வருவாள்.

இன்னும், காமதேனு வாகனத்தைப் பாருங்கள். நினைத்ததை நினைத்தவாறு அள்ளி வழங்கும் காமதேனுவில் உலா வந்து அம்பாள் அருளினை அள்ளி அள்ளித் தருவாள். 'அள்ளிக் கொடுப்பாள் அடியார் மிடிகள் அகன்றிடவே' என்று பாடுகிறார் கவிஞர் பெ.பொ. சிவசேகரனார்.

இடப வாகனமும் இவ்வாறு சிறப்புடையது. அம்பாள் இடப வாகனத்தில் உவந்து எழுந்தருள்வாள். காளை தியாகத்தினைக் குறிக்கும். உழவனுக்காக இரவுபகலாக உழைக்கிறது. நெல்விளைய



வேண்டி, தனது வியர்வையைச் சிந்தும் காளை கைமாறாக உழவனிடம் பெறுவது வெறும் வைக்கோல் அல்லவா?. இது போன்று மனிதர்கள் தமது உழைப்பினை அர்ப்பணத்துடன் நல்கவேண்டும் என்பது தெளிவு. சம்பந்தருக்கு இறைவனும் இறைவியும் விடையேறி வந்து காட்சி நல்கியமையை, அன்னை ஞானப்பால் ஊட்டியமை நாம் அறிந்ததே.

பேரூழிக் காலத்தில் சிவசக்திகளின் வாகனமாக அது விளங்கும். அக்கினிப் பிரளய காலத்தில் தருமதேவதை தானும் இறக்கும் என்றஞ்சி கங்காதரன் ஆகிய சிவனை அணுகிச் சரணடைந்து, அழிவற்ற நிலையைப் பெறவிரும்பினான். இடப உருவமெடுத்து, சிவன்முன் சென்று, சிவனார்க்கு ஊர்தியாகும் பெரும்பேற்றைத் தருமாறு தருமதேவதை வேண்டினாள். சிவனார் தருமதேவதையின் வேண்டுகோளை ஏற்று அருளினார். அன்று தொட்டு தம்மைப் பரிவுடன் பக்தியுடன் வழிபடும் அடியவர்களுக்கு அன்னை சமேதரராய் இடபவாகன ஊர்தியில் எழுந்தருளிக் காட்சி தந்துள்ளான்.

இறைவன் யானையிலும் குதிரையிலும் அலங்கரித்த தேரிலும் எழுந்தருளாது, இடப வாகனத்தில் உலாவருவதேன் என்னும் வினாவினைத் தானே கேட்டு, மாணிக்கவாசகர் விடையையுந் தருகிறார். இதோ அப்பாடல்:-

**கடகரியும் பரிமாவும் தேரும் உகந்து ஏறாதே**
**இடபம் உகந்தேறியவாறு எனக்கறிய இயம்பேடி!**
**தடமதில்கள் அவை மூன்றும் தழலெரித்த வந்நாளில்**
**இடபமாய்த் தாங்கினான் திருமால் காண் சாழலோ!**

- இப்படி பலவாறு பல்வேறு ஊர்திகளில் உலா வந்து அம்பாள் எமது துயர்களைவாள். அவளை இறுகப் பற்றிக்கொள்வோம் வாரீர்!

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள தம்பலகாமம் தந்த தமிழறிஞர் கலாநிதி புலவர் சிறிகாந்தன் சத்தியமூர்த்தி அவர்கள். அன்னார் இளம் வயதில் தாயகத்தில் காலமானது எமது துரதிர்ஷ்டம். அவர் திருகோணமலை இந்துக்கல்லூரி மாணவனாக இருந்த காலத்தில் வாரந்தோறும்திருகோணமலைபத்திரகாளிஆலயம் புக்கு அம்பாள் வழிபாட்டில்ஈடுபட்டவர். அன்னை வழிபாடு பற்றிக் கூறிய கருத்துக்களும் எமது சிந்தனைக்குஉரியவை. இதோ:-

'சங்க இலக்கியங்களில் கொற்றி, கொற்றவை, கூளி என்னும் பல்வேறு பெயர்களால் கொற்றவை குறிக்கப்படுகின்றாள். வெற்றித் தெய்வம் என்று பொருள்படும் கொற்றி என்னும் சொல் 'கொல்'என்னும் அடிச்சொல்லில் இருந்து தோன்றியது. அச்சொல்லுடன் 'ற்றி'என்னும் பெண் பால் ஒருமை விகுதியுஞ் சேர்ந்து 'கொற்றி' ஆகியுள் ளது


கொற்றவை தாய் - வெற்றித் தெய்வம் என்னும் அதே அடியோடு தவ்வை அல்லது அவ்வை என்பது சேர்ந்து தோன்றியதாகும். தவ்வை, அவ்வை என்னும் இரண்டு சொற்களும் தாய் என்று பொருள்படும். கொற்றம், அவ்வை என்ற இருசொற்களும் சேர்ந்து கொற்றவை ஆகியுள்ளது என்று இன்னொரு வகையாகவும் கூறலாம். கூளி என்ற சொல் திரிசூலத்தை உடைய கொற்ற வையை உணர்த்துகின்றது. சங்க காலத்தில் குறிஞ்சி நிலத்திலும், முல்லை நிலத்திலும் வாழ்ந்த மக்கள் கொற் றவையை வழிபட்டு வந்துள்ளார்கள்.

முருகனைப் பெற்றெடுத்ததாகக் கொற்றவையின் கருப்பை புகழப் படுகின்றது. பாதிபெண்ணும், பாதி ஆணுமாயுள்ள சிவனின் அர்த்த நாரீஸ்வரர் உருவம் பற்றிய கருத்து சங்ககாலத்தில் இருந்திருக்கின்றது. இமையா நாட்டமுடைய நெற்றிக்கண் கொண்ட தனது கணவனாகிய சிவனின் இடப்பாகத்தைத் தனக்கு இடமாகக் கொண்டுள்ள கொற்றவை என்று கூறப்படுகின்றது.

தைநீராடலில் ஒருபெண் இன்னொரு பெண்ணின் நெற்றியிலே சிவப்புத் திலகம் இடுகிறாள். திலகந் தாங்கியபெண் கொற்றவைபோல் காட்சியளிக்க வேண்டும் என்று கருதியே அவள் அப்படிச் செய்கிறாள். இந்த நிகழ்ச்சியைக் கூறும் பொழுது கொற்றவையின் நெற்றியில் உள்ள நெருப்புக் கண்ணைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் புலவர். கொற்றவை ஆகிய அம்பாளை வேண்டி ஆடும் புனித நீராடலைக் குறிப்பதாக 'அம்மாஆடல்'எனும் சொற்றொடருக்குப் பொருள் கொள்ளலாம். பாவை நோன்பும்,புனித நீராடலும் முற்றாகக் கொற்றவைக்கே உரியவையாகப் பிற்கால வழக்கத்தில் காணப்படுகின்றது. நாடு செழிக்க மழைநல்க வேண்டுமென்றும், தங்களை விட்டுப்பிரியாதிருக்கும் நல்ல கணவன்மாரைத் தந்தருள வேண்டுமென்றும் கொற்றவையின் அருள் வேண்டிக் கன்னிப் பெண்கள் நிற்பதை 'அம்மாஆடல்' எடுத்துக் கூறுகிறது.

கொற்றவை பார்வதியாக மாற்றம் பெறுவதைச் சங்க இலக்கியங்களில் காணலாம். திருமுருகாற்றுப் படையில் முருகன் 'மலைமகள் மகன்' என்றும், 'கொற்றவைசிறுவ' என்றும் வர்ணிக்கப்பட்டிருப்பது இம்மாற்றத்தின் உண்மை நிலையை எடுத்துக் கூறுகின்றது. அங்கே பார்வதி அல்லது மலைமகள் கொற்றவையோடு இனங்கண்டு கொள்ளப்படுகிறாள்.

> பாவை நோன்பும், புனித நீராடலும் முற்றாகக் கொற்றவைக்கே உரியவையாகப் பிற்கால வழக்கத்தில் காணப்படுகின்றது.



கலாநிதி சி.சத்தியமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்காகவும் பேராயர் தனது குரலை உயர்த்தவேண்டும்

## சிறிதரன் எம்.பி. சபையில் தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் உயிரிழந்தவர்களுக்காக குரல் எழுப்பி வரும் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இறுதி யுத்தத்தால் உயிரிழந்த பச்சிளம் குழந்தைகளுக்காகவும் ஆண்டகையின் குரலை உயர்த்த வேண்டும். ஆனால் யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்காக அஞ்சலி செலுத்துமாறு ஒருநாள் கூட கூறியிருக்கவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சபையில் தெரிவித்தார்.

தமிழ் இளைஞர்கள் வாழ முடியாத நிலைக்குத் தள்ளப்படுமளவுக்கு நாட்டில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் ஊடாகக் கைதுகள் தலைத்தூக்கியுள்ளன எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் கூறுகையில் -

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் உயிரிழந்தவர்களுக்குநாட்டின்அனைத்து மாவட்டங்களிலும் அஞ்சலி செலுத்துமாறு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை கோரிக்கையொன்றை விடுத்திருந்தார். அந்த கோரிக்கையின் பிரகாரம் கடந்த புதன்கிழமை காலையில் மக்கள்அஞ்சலிசெலுத்தியிருந்தனர். தாக்குதல்களில் உயிரிழந்த அப்பாவி மக்களுக்காக நாமும்சபையில்அஞ்சலிசெலுத்தினோம்.

தமிழர்கள் இந்த மண்ணில் கடந்த 70 ஆண்டுகளாக கொத்துக்கொத்தாக கொல்லப்பட்டுள்ளனர். 2008ஆம்ஆண்டு இறுதிமுதல் 2009 மே 18 வரை இந்த மண்ணில் பல்லாயிரக்கணக்காகத் தமிழர்கள் கொல்லப்பட்டனர்.

ஆயிரக்கணக்கான குழந்தைகள் கொல்லப்பட்டனர். முள்ளிவாய்க்காலில் நான்கு லட்சத்திற்கும் அதிகமானவர்கள் முடங்கியிருந்த நிலையில் 75 ஆயிரம் பேருக்கு மாத்திரமே உணவு அனுப்பப்பட்டது.

உணவில்லாமல்கூட பலர் உயிரிழந்தனர். கஞ்சிக்காகவும் சோற்றுக்காகவும் வரிசையில் நின்ற பச்சிளம் குழந்தைகள் கொல்லப்பட்டனர். ஐ.நாவின் அங்கத்துவ நிறுவனங்கள் இலங்கையில் இருக்க விடாது கலைக்கப்பட்டன.

இவ்வாறு பாரிய அநியாயங்கள் இடம்பெற்ற போது கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை எந்தவொரு கருத்தையும் முன்வைக்கவில்லை. யுத்தத்தில் உயிரிழந்த மக்களுக்காக அஞ்சலி செலுத்துமாறு ஒருநாள்கூட கூறியிருக்கவில்லை. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களில் உயிரிழந்தவர்களுக்காக மட்டுமல்ல யுத்தத்தால் உயிரிழந்த பச்சிளம் குழந்தைகளுக்காகவும் ஆண்டகையின் குரலை உயர்த்த வேண்டும்.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தின் ஊடாக இன்றும்கூட பல தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகின்றனர். கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நீர்வேலி, கோப்பாய், கள்வியங்காடு போன்று பகுதிகளிலும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலும் பல இளைஞர்கள் ஒரே இரவில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர். அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் எங்கே இருக்கின்றனர் என்றும் எவ்வாறான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரியாதுள்ளது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தினூடாக அடக்கு முறையும் மலிந்துப் போயுள்ளது. ஊடகசுதந்திரம் இல்லாத நாடாக இலங்கை மாறிக்கொண்டுள்ளது. ஊடகவியலாளர்கள் எவரும் தொடர்புகளை வைத்திருந்தால் அவர்கள் நான்காம் மாடிக்கு அழைக்கப்படுகின்றனர். கடந்த மார்ச் 29 ஆம் திகதியுடன் தொலைக்காட்சியின் தொகுப்பாளரும் செய்தியாளருமான குலேந்திரன் சுலக்ஷன் என்பவர் வெளிநாட்டில் உள்ள தடைசெய்யப்பட்ட அமைப்பொன்றின் உறுப்பினருடன் தொடர்பில் இருக்கிறார் என பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் நான்காம் மாடிக்கு அழைக்கப்பட்டு நான்கு மணித்தியாலங்கள் விசாரணை செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு பல இளைஞர்கள் காரணமின்றி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் ஊடாக கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். கிளிநொச்சியில் உள்ள ஆசிரியர் சிவேந்திரன் என்பவர் நான்காம் மாடிக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், என்னைபற்றியும் அவரிடம் விசாரணை செய்துள்ளனர். இளைஞர்கள் வாழ முடியாத நிலைக்கு பயங்கரவாதத் தடைச்சட்டம் தலைத்தூக்கியுள்ளது. தமிழர்களைக் குறிவைத்து தான் இந்தச்சட்டம் பயன்படுத்தப்படுகிறது. 12 பேர் கைது செய்யப்பட்டு எவ்வித வழக்குகளும் தாக்கல் செய்யாது ஒரு வருடத்துக்கும் மேலாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர். நாட்டின் ஜனநாயகம் நியாயமற்ற விதத்தில் செல்கிறது. வன்முறை ரீதியாகவே அரசாங்கம் சிந்திக்கிறது.

காலிமுகத்திடலில் அஹிம்சை வழியில் போராடிய இளைஞர்கள் மீது குண்டாம்தடி தாக்குதலை பொலிஸார் தாக்கியதால்தான் ஆயுதப் போராட்டம் வெடித்தது. இதுவொரு சிங்கள வன்முறைக்கான நாடாளுமன்றமா? வன்முறை களமாக நாடாளுமன்றத்தை சிங்களத் தலைவர்கள் பாவிப்பதால்தான் தமிழர்களுக்கு நீதி கிடைக்காதுள்ளது. சிங்கள மக்கள் இதனை உணர்ந்துக்கொள்ள வேண்டும். - என்றார்.

## கொழும்புக்கான விமான சேவையை வாரத்துக்கு ஏழாக அதிகரித்த எமிரேட்ஸ்

கொழும்புக்கான தனது சேவைகளை வாரத்தில் ஆறிலிருந்து ஏழு ஆக அதிகரிக்கப் போவதாக எமிரேட்ஸ் விமான சேவை அறிவித்துள்ளது.

அதன்படி இந்த சேவை மே 3 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படும்.

கூடுதல் விமான சேவை சந்தை தேவைக்கு உதவவும் கொழும்பிலிருந்து டுபாய் வழியாக இணைப்புகளை மேம்படுத்தும்.

இந்த ஆண்டு பெப்ரவரியில் எமிரேட்ஸ் கொழும்புக்கான தனது விமான சேவைகளை வாரத்திற்கு ஆறாக உயர்த்தியது. பெப்ரவரி 18 முதல் வாரத்தில் ஐந்தாவது விமானமும், பெப்ரவரி 27 முதல் வாரத்தில் ஆறாவது விமானமும் தமது சேவையை ஆரம்பித்திருந்தது.

## கடுகதி ரயிலில் சிக்குண்டு 16 எருமை மாடுகள் சாவு

### வவுனியாவில் நேற்று கொடூரம்



வவுனியா ஓமந்தை பகுதியில் 16 எருமை மாடுகளை கடுகதி ரயில் நேற்று (வியாழக்கிழமை) மோதித் தள்ளியதில் அனைத்து மாடுகளும் பலியாகியுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலே ஓமந்தை பகுதியில் மேய்ச்சலில் ஈடுபட்டிருந்த எருமை மாடுகள் மீது மோதியுள்ளதாகவும், இதன் காரணமாக பல லட்சம் பெறுமதியாக 16 எருமை மாடுகள் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் மேய்ச்சல் தரை இன்மையால் பலரும் தமது மாடுகளை மேய்ச்சலுக்காக வேறு இடங்களுக்குக் கொண்டுசெல்ல முடியாத நிலையில், அவை வீதியோரங்கள் மற்றும் ரயில் பாதைகளுக்கு அருகிலேயே இரை தேடி வரும் நிலையிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## தோட்ட வைத்தியசாலைகள் அரசின்கீழ் கொண்டுவரப்படும்

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

தோட்ட வைத்தியசாலைகளின் தேவைக்கேற்ப படிப்படியாக அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்படுமெனவும், அரச வைத்தியசாலைகளுக்கு அண்மையில் உள்ள தோட்ட வைத்தியசாலைகள் அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்படத் தேவையில்லை எனவும் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் கடந்த புதன்கிழமை, வாய்மூல விடைகளுக்கான வினாக்கள் நேரத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமாரின் கேள்விக்குப் பதில் தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.


அவர் மேலும் கூறுகையில் -

நாட்டில் தற்போது 494 தோட்ட வைத்தியசாலைகள் காணப்படுகின்றன எனவும், இதில் 44 தோட்ட வைத்தியசாலைகள் அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன எனவும், இந்த தோட்ட வைத்தியசாலைகள் கண்டி, நுவரெலியா, பதுளை, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன.

தோட்ட வைத்தியசாலைகளுக்கு அண்மித்தப் பகுதிகளில் அரச வைத்தியசாலைகள் காணப்படுமாக இருந்தால், தோட்ட வைத்தியசாலைகளை அரசாங்கத்தின் கீழ் கொண்டுவரத் தேவையில்லை எனவும் தெரிவித்த அவர், தேவைக்கு ஏற்ப படிப்படியாக அரசாங்கத்தின் கீழ் தோட்ட வைத்தியசாலைகளைக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தோட்ட வைத்தியசாலைகளுக்கு முக்கியத்துவமளித்து செய்யக்கூடிய அனைத்து சுகாதார வேலைத்திட்டங்களையும் அரசாங்கம் முன்னெடுக்குமெனவும் உறுதியளித்த சுகாதார அமைச்சர், நாட்டில் வைத்தியர்களுக்கான பற்றாக்குறை இருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

## தினம் ஒரு விவசாயத் தகவல்

### பச்சைப்பயறு பயன்கள்



இது அதிக அளவில் புரதசத்தும், குறைந்த அளவில் கொழுப்புச்சத்தும் கொண்டுள்ளது. முளைக்கட்டிய பாசிப்பயறு உடற்குறைப்புக்கு சமச்சீர் உணவாக அதிகமாக பயன்படுத்தப்படுகிறது.

பயறு துவர்ப்புடன் கூடிய இனிப்புச் சுவையும், சீதவீரியமுள்ளதுமாகும். நல்ல ருசி உடையது. பசியைத் தூண்டி எளிதில் ஜீரணமாகக் கூடியது.

முளைகட்டிய பயறுகள் உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, உடலுக்குத் தேவையான எனர்ஜியைத் தருபவை. உடல் எடையைக் குறைக்கவும் உதவும்.

விற்றமின் ஏ நிறைந்திருக்கிறது. கண்களுக்கு குளிர்ச்சி தருகிறது பார்வைத் திறனை மேம்படுத்தும். இவற்றில் ஒமேகா அமிலம் அதிகமாக இருப்பதால், முடி வளர்ச்சிக்கும் உதவுகின்றன.

இரத்தத்தில் தெளிவை ஏற்படுத்திக் கொதிப்பைக் குறைக்கும். கபமோ, பித்தமோ அதிகமாகாமல் உடலை ஒரே சீராகப் பாதுகாக்கும்.

பருப்பை வேக வைத்த தண்ணீரை உப்பும், காரமும் சேர்த்து நோயுற்ற பின் மெலிந்து பலக்குறையுள்ளவர்கள் சாப்பிட களைப்பு நீங்கிப் பலம் உண்டாகும்.

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கொரோனா: சுற்றுலா செல்லாதீர்!

## பொதுமக்களிடம் இராணுவத் தளபதி கோரிக்கை



இலங்கையில் மீண்டும் கொரோனா வைரஸின் அபாயம் ஏற்பட்டுள்ளது. இரண்டு மாதங்களுக்குப் பின்னர் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. எனவே, அடுத்த ஒரு மாதத்துக்குச் சுற்றுலா செல்வதைப் பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு கொரோனா வைரஸ் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானி இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழ், சிங்களப் புத்தாண்டு காலப் பகுதியில் ஒரு சிலர் சுகாதார நடை முறைகளைப் பின்பற்றாமல், பொறுப் பற்ற விதத்தில் செயற்பட்டதைக் காண முடிந்தது. இதன் தாக்கம் இன்னும் இரு வாரமளவிலேயே தெரியக்கூடியதாக இருக்கும்.

நாட்டில் கொரோனா வைரஸ் பரவக் கூடிய அச்சுறுத்தல் காணப்படுகின்றது. எனவே, அடுத்துவரும் ஒரு மாதம் என் பது எமக்கு மிக முக்கியமான காலப்பகுதியாகும்.

அடுத்த ஒரு மாதத்துக்குள் சுற்றுலா செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

அத்துடன், வெளிநாடுகளில் இருந்து வருபவர்களிலும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர் - என்றார்.

# அரசின் மிரட்டலுக்கு நான் அடிபணியேன்!

## விஜேதாஸ எம்.பி. சூளுரை



எனக்கு எதிராக ஒழுக் காற்று நடவடிக்கை எடுத்தோ அல்லது நான் உள்ளிட்ட எனது குடும்பத்தினரைக் கைது செய்து சிறையில் அடைத்தோ அரசு மிரட்டினால் அதற்கெல்லாம் அடிபணியமாட்டேன். ஜனாதிபதியின் பொய் முகத்தை அம்பலப்படுத்தியே தீருவேன். இவ்வாறு கடும் சீற்றத்துடன் தெரிவித்தார் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜே தாஸ ராஜபக்ஷ.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமைச்சுப் பதவி கிடைக்க வில்லை என்ற ஆதங்கத்தில் அரசு மீதும், ஜனாதிபதி மீதும் நான் வசை பாடுகின்றேன் என்று அமைச்சர்கள் சிலர் புலம்புகின்றனர்.

அதேவேளை, ஜனாதிபதி என்னை அச்சுறுத்தவில்லை எனவும், உயிரா பத்து எதுவும் எனக்கு இல்லை எனவும் மேலும் சில அமைச்சர்கள் பொய்யான கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

தத்தமது அமைச்சுப் பதவிளைத் தக்கவைப்பதற்காக அவர்கள் என்னைத் திட்டித் தீர்க்கலாம். ஆனால், எனக்கோ அமைச்சுப் பதவி பெறும் நோக்கமோ அல்லது அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை என்ற ஆதங்கமோ இல்லை.

இலங்கையை வெளிநாடு களுக்குத் தாரைவார்க்கும் நோக்குடன் ஜனாதிபதிக்கும் அரசுக்கும் மக்கள் ஆணை வழுங்கவில்லை. நாடு மீண்டெழவேண்டுமென்றே மக்கள் விரும்பு கின்றனர். ஆனால், அரசி லுள்ள முக்கிய தரப்பினர் நாட்டைச் சீனாவுக்குத் தாரை வார்த்து அதில் சுகபோகங் களை அனுபவிக்க முயல்கின் றனர்.

இதைத்தான் நான் பகிரங்கமாகச் சுட்டிக்காட்டினேன். உண்மைகளைக் கூறியமைக்காக நான் சிறை செல்லவும் தயார் - என்றார்.

# பல்கலைக்கழகங்கள் திறக்கப்படமாட்டா!

## கல்வி அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, ஏப். 22

எதிர்வரும் 27ஆம் திகதி பல்கலைக் கழகங்கள் மீளத் திறக்கப் படமாட்டாது என கல்வி அமைச் சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரி வித்தார்.

இன்று காலை நாடாளுமன் றத்தில் வைத்து அவர் இதனைக் கூறினார். எதிர்வரும் இரு வாரங்களுக்குப் பல்கலைக்கழங்களைத் மீளத் திறப்பதை ஒத்திவைத்துள்ளதாகவும் அவர் கூறினார். நாட்டில் கடந்த இரு மாதங்களின் பின்னர் மீண்டும் கொரோனாத் தொற்று பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

# தமிழீழத்தை எதிர்த்தவர்கள் இப்போது சீன ஈழத்தைத் தோற்றுவிக்க முயற்சி!

## சஜித் அணி குற்றச்சாட்டு



தமிழீழத்தை எதிர்த்தவர்கள் இப்போது சீன ஈழத்தைத் தோற்றுவிப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். அத்துடன், இவ்வாறான செயற் பாடுகளால் நாட்டின் இறை யாண்மை மற்றும் தனித்துவமே பாதிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அதிகாரப் பகிர்வு குறித்து தற்போதைய அரசே பரவலாகக் கருத்துக்களைத் தெரிவித்த நிலையில், அரசை ஆட்சிக்குக் கொண்டுவரப்பாடுபட்ட தேரர்கள் மாகாண சபை முறைமையை முற்றாக எதிர்க்கின்றனர்.

எனினும், இந்தியாவின் அழுத்தம் காரணமாவே மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது. கூட்டாட்சி என்ற சொல்லைக்கூட விரும்பாத இந்த அரசு இப்போது இலங்கைக்குள் சீனாவின் இராஜ்ஜியத்தைத் தோற்றுவிக்க முயற்சிக்கின்றது.

இந்நிலையில், சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் எம்முடன் வாழ்கின்ற மக்களுக்கு தமிழீழத்தைத் தர முடியாதெனக் கூறியவர்களே தற்போது சீன ஈழத்துக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர் என்றார்.

# நாடாளுமன்ற அமைதியின்மை பற்றி விசாரிக்க குழு நியமனம்

நாடாளுமன்றத்தில் நேற்று ஏற்பட்ட அமைதியின்மை சம்பவம் தொடர் பில் விசாரணை நடத்த சிரேஷ்ட உறுப்பினர்களைக் கொண்ட விசேட குழுவை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரி வித்தார்.

சபைக்குள் நேற்று ஆளுங்கட்சியினரும் எதிர்க் கட்சியி னரும் ஏட்டிக்குப் போட்டியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், அதன் பின்னர் எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் சபைக்கு வெளியே ஆளும் கட்சி உறுப்பினர் ஒரு வரைத் தாக்குவதற்கு முயற்சித்துள்ளனர் என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பாக இன்று நாடாளுமன்றத்தில் சபாநாயகரிடம் முறையிட்ட சபை முதல்வர் தினேஷ் குணவர்தன, இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இதன்போது ஆளும் மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்களும் தமது கருத்துக்களை முன்வைத்து, இவ்வாறான சம்பவங்களால் நாடாளுமன்றத்தின் மீது மக்கள் வைத்துள்ள மதிப்பும் இல்லாமல் போயுள்ளது என்று சுட்டிக்காட்டினர்.

இந்த விடயம் தொடர்பாக அவதானம் செலுத்திய சபாநாயகர், 7 பேர் கொண்ட சிரேஷ்ட எம்.பிக்களை உள்ளடக்கிய விசேட குழுவை அமைத்து, அதன்படி சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தார்.

# கரைதுறைப்பற்று பிரதேச சபையை தக்கவைத்தது தமிழ்க் கூட்டமைப்பு!

## ரெலோ விஜிந்தன் புதிய தவிசாளராகத் தெரிவு

முல்லைத்தீவு- கரைதுறைப்பற்று பிரதேச சபையின் ஆட்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தக்க வைத் துள்ளது. புதிய தவிசாளராக ரெலோவைச் சேர்ந்த கமலநாதன் விஜிந்தன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி களில் ஒன்றான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்) அமைப்பைப் பிரதிநித்துவப்படுத்தும் கனகையா தவராசா, கடந்த மூன்று வருடங்களாக கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராகப் பதவி வகித்தார்.

இந்நிலையில் கடந்த மாதம் 18ஆம் திகதி அவர் தனது பதவி விலகலை உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

அந்தவகையில் குறித்த பிரதேச சபையின் புதிய தவிசாளருக்கான தேர்வு இன்று இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கமைவாக வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தலைமை யில் இன்று புதிய தவிசாளரைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பு இடம் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir

# கொரோனா தொற்று தீவிரமடையலாம்; மக்கள் விழிப்பாக செயற்பட வேண்டும்

## யாழ். மாவட்ட அரச அதிபர் எச்சரிக்கை



(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம்.ஏப்.23

தொற்று நிலைமை சற்றுத் தீவிரம் அடையலாம் என எதிர்பார்க்கப்படு வதனால் பொதுமக்களை விழிப்பாகச் செயற்படுமாறு என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித் துள்ளார்.

யாழ் மாவட்டத்தில் தற்போது உள்ள கொரோனா நிலைமைகள் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நேற்றுத்தாம் நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்ட வாறு தெரிவித்தார்

யாழ்.மாவட்டத்தில் தற்போதைய கொரோனாத் தொற்று கடந்த வாரம் சற்று அதிகரித்து நிலைமை காணப்பட்ட போதிலும் இந்த வாரம் சற்றுக் குறை வடைந்து காணப்படுகின்றது. நேற்று மாலை கிடைத்த பி.சி.ஆர். பரிசோதனை அடிப்படையில் 14 நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ்.மாவட் டத்தில் 1,155 பேருக்கு கடந்த அக்டோபர் மாதத்திற்குப் பின்னர் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் 639 நபர்கள் பூரண சுகமடைந்து வீடு திரும்பி இருக்கிறார்கள். 17 இறப்புக்கள் பதிவாகி யுள்ளன

இந்தநிலைமையில் யாழில் 1,547 குடும்பங்களைச் சேர்ந்த 4,417 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட் டுள்ளார்கள். தொடர்ச்சியாக மக்கள் கூடும் இடங்களிலும், வர்த்தக நிலையங் களை அண்டிய பகுதிகளிலும் தொடர்ச்சி யாக பி.சி.ஆர். பரிசோதனைகள் எழுமா றாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த வாரமளவில் திருநெல்வேலி யில் முடக்கப்பட்ட கிராமத்தில் ஒரு பகுதி யைத் தவிர்ந்த ஏனையவற்றை விடுவித்திருந்தோம். மேலும் பாரதிபுரம் என்னும் கிராமம் நாளை( இன்று) காலையில் இருந்து விடுவிப்பதற்குரிய நடவடிக்கைகளைச் சுகாதார பிரிவினர்கள் எடுத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

அங்கு நேற்று 97 பேரிடம் மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை களில் மூவருக்கு மாத்திரமே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஏனையோருக்கு தொற்றில்லை. அந்த நிலைமை திருப்தியாக உள்ளது. அதனால் திருநெல்வேலி பாரதிபுரம் கிராமத்தை கண்காணிப்பு வலயத்தில் இருந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் தனிமைப்படுத்தப் பட்டுள்ளோருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் உதவித்தொகை உண வுப் பொதிகள் வழங்கி வருகின்றோம். 4,823 குடும்பங்களுக்கு ஐந்து கோடி ஐந்து லட்சம் ரூபா அதற்காக செலவிடப் பட்டுள்ளது.

மேலும் யாழ் மாவட்டத்தில் தனியார் மற்றும்பாடசாலைகல்விநடவடிக்கைகள் திட்டமிட்டபடி ஆரம்பித்து இடம்பெற்று வருகின்றன. அதற்குரிய சுகாதார வழிமுறைகளையும் சுகாதார வழிகாட் டல்களையும் சுகாதார மற்றும் கல்வி அமைச்சு இணைந்து மேற்கொண்டி ருக்கின்றன தொற்றுநிலைமை சற்று தீவிரம் அடையலாம் என எதிர்பார்க் படுவதன் காரணமாக பொதுமக்கள் சற்று விழிப்பாக செயற்பட வேண்டும். குறிப்பாக நகரப்பகுதி மற்றும் மக்கள் ஒன்று கூடும் இடங்களில் பொது மக்கள் அவதானமாக தங்களுடைய செயற்பாடு களை மேற்கொள்ளவேண்டும். அநாவ சிய நடமாட்டங்களை தவிர்த்து தேவை யானவற்றுக்கு மாத்திரம் வருகை தரலாம். அவ்வாறு வரும்போது முக கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல் போன்றவற்றைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்.அதே நேரத்தில் யாழ்.நகரப்பகுதியில் இராணுவத்தி னரால் தொற்று நீக்கி திரவம் விசிறும் நடவடிக்கை முன்னெடுக் கப்பட்டுள்ளது. அது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும்.

சுகாதாரப் பகுதியினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு ஒத்து ழைப்பு வழங்குவதன் மூலம் யாழ்ப் பாண மாவட்டத்தில் கொரோனாப் பரவல் நிலைமையைக் கட்டுப்பாட்டுக் குள் வைத்திருக்க முடியும். தொடர்ச்சி யான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம். அவற்றை செவிமடுத்து பொதுமக்கள் ஒழுகுவது முக்கியமானது. எதிர்வரும் காலப்பகுதி யில் இந்த தொற்று நிலைமை தீவிரமா கலாம் என்று எதிர் பார்க்கப்படுகின்றது. அதனை சுகாதார அமைச்சு மற்றும் கொவிட் கட்டுப்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்திருக்கின்றது.

எனவே அவற்றுக்குத் தக்கவாறு சில முன்னேற்பாடுகளை நாங்கள் மேற் கொள்ள வேண்டும். அந்த வகையிலே பொது மக்களுடைய ஒத்துழைப்பு மிக அவசியமானது.

அதேநேரத்தில் சில கூட்டங்களுக் கான ஏற்பாடுகளைச் செய்யும் போது அதற்குரிய நடைமுறைகளை சுகாதாரப் பகுதியினரின் அனுமதி, ஆலோசனை களைப் பெற்று முன்னெடுத்தல் மிக அவசியமாகும். என்றார்.

# தெற்கு நெடுஞ்சாலையில் கார் ஜன்னலில் அமர்ந்து சென்றவர்களுக்குப் பிணை

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த சர்ச்சைக்குரிய கார் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த காரின் சாரதி மற்றும் பயணிகள் நால்வரும் 5 லட்சம் ரூபா பெறும தியான சரீரப் பிணையில் விடுவிக் கப்பட்டுள் ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு ;

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை பாதுகாப்பற்ற முறையில் காரின் ஜன்னலில் அமர்ந்து பயணித்தனர் எனக் காரின் சாரதி உட்பட ஐந்து பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேக நபர்கள் பாணந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு நேற்று வியாழக்கிழமை வரை விளக்கம றியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் , நேற்று மன்றில் முன்னி லைப்படுத்தப்பட்ட சந்தேக நபர்களை 5 லட்சம் ரூபா பெறுமதியான சரீர பிணை யில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளதுடன், இந்த வழக்கு விசார ணைகளை எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதிவரை ஒத்திவைத்துள்ளது.

இதேவேளை, இந்த சம்பவத்துடன் தொடர்புகொண்டுள்ள கார் கண்டி பேரா தனை பகுதியைச் சேர்ந்த நபரொருவருக்குச் சொந்தமானது என்று தெரியவந்துள்ளது. குறித்த நபர் உரிய சட்டவிதிகளுக்குப் புறம்பாக இன்னுமொருவருக்குக் காரை பொறுப்பளித்துள்ளார் என விசாரணை களின் போது தெரியவந்துள்ளது. அதற்க மைய அவரிடமிருந்து 5 ஆயிரம் ரூபா அபரா தம் அறவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள வழக்கு விசாரணைகளின் போது சந்தேக நபர்கள் ஐந்து பேருக்கும் எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட உள்ளது.

# மிருசுவிலில் 8 பேரின் கழுத்தை அறுத்து கொன்ற கொலையாளி சுனில் ரத்னாயக்க

## சரத் பொன்சேகா நாடாளுமன்றில் ஒப்புதல் உரை

சுனில் உள்ளிட்ட இராணுவ சிப்பாய்கள் மிருசுவிலில் 8 பேரை கொலை செய்து, கழுத்தை அறுத்து புதைத்தனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் வைத்து நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கூறுகையில் -

மரண தண்டனை கைதியாக தண்டனை அனுபவித்து வரும் முன்னாள் எம்.பி துமிந்த சில் வாவை விடுதலை செய்யவும் அரசியல் பழிவாங்கல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்து ரைத்துள்ளது.

ஒரு மரண தண்டனைக் கைதி யை விடுவிக்க சில பொறிமுறைகள் உள்ளன. இங்கு அவை பின்பற்றப் படவில்லை. ஜனாதிபதி பின் கதவால் தீர்மானங்களை எடுக்கின் றார்.

மரண தண்டனைக் கைதியை விடுவிக்க சிறைச்சாலைகள் ஆணையாளர் பரிந்துரை முன் வைக்க வேண்டும். பின்னர் ஒய்வு பெற்ற சட்டமா அதிபர் அடங்கிய குழுவை நியமிக்க வேண்டும். பாரிய குற்றம் செய்தவர் தொடர்பில் ஜனாதிபதிக்கு சமூகப் பொறுப்பு இருக்க வேண்டும்.

நன்னடத்தை தொடர்பில் ஜனா திபதி கவனம் செலுத்த வேண்டும். ஆனால் இவை அனைத்தும் இங்கு பின்பற்றப்படவில்லை. இந்த அரசாங்கம் மரண தண் டனை கைதி சுனில் ரத்நாயக்க வுக்கு மன்னிப்பளித்து விடுதலை செய்தது. சுனில் உள்ளிட்ட இராணுவ சிப்பாய்கள் மிருசு விலில் 8 பேரை கொலை செய்து, கழுத்தை அறுத்துப் புதைத்தனர். மரண தண்டனை விதிக்கப்பட்ட அவரை விடுதலை செய்துள்ளீர் கள். நீங்கள் எவ்வாறு அத்தகைய செயல்களை அங்கீகரிப்பீர்கள் ?

கொலைகாரன் கொலைகாரன் தான். பிரேமாவதி மனம்பேரியை கொன்றதும் இராணுவ சிப்பாயே. அவர் தூக்கு மேடைக்கு அனுப் பப்பட்டார். இராணுவ வீரர் களை விடுவிக்கின்றோம் என நீங்கள் கொடி தூக்க முடியாது.- என சுட்டிக்காட்டியுள்ளார்.

# சம்பந்தன், பங்காளிகளுடன் ஆலோசித்தே முதலமைச்சர் தொடர்பில் முடிவு எடுப்போம்

## இப்படிக் கூறுகின்றார் தமிழரசுத் தலைவர் மாவை

மாகாணசபை முறைமை தொடர்பான அரசின் யோசனை மற்றும் வட மாகாண முதலமைச்சர் வேட்பாளர் விவகாரம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுடன் கலந்துரை யாடவுள்ளனர் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தலைக் காலம் தாழ்த்தாது நடத்த வேண்டிய கட்டாயத்தில் அரசு இருப்பதாகவும், தேர்தலுக்கு எதிராக தென்னிலங்கையில் இனவாதப் போக்கு டைய சிலர் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட் டுள்ளார். மாகாணசபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் அழுத்தம் கொடுத்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

மாகாணசபை முறைமையில் மாற்றத் தைக் கொண்டுவர அரசு யோசனை முன்வைத்துள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மற்றும் கூட்ட மைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோருடன் தான் கலந்துரையாடவுள்ளார் எனவும் மாவை சேனாதிராஜா குறிப்பிட் டுள்ளார். வடமாகாணசபை முதலமைச்சர் வேட்பாளர் விவகாரம் தொடர்பில் கூட்ட மைப்பின் தலைவர் மற்றும் பங்காளிக் கட்சிகளுடன் கலந்துரையாடவுள்ளார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# புளியம்பொக்கணையில் புதன் இரவு கணவன், மனைவி மீது வாள்வெட்டு!

தருமபுரம், ஏப்.23

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட புளியம்பொக் கணை முசுரம் பட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு வேளை இனந்தெரியாத இரு வர் வீடு புகுந்து கணவன் மனைவி மீது சரமாரியான வாள்வெட்டு நடத்திவிட்டுத்தப்பி சென்றுள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் தருமபுரம் வைத்தி யசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கல்வி வலயத்தின் கணக்குக் கிளை தொற்றால் இழுத்து மூடப்பட்டது!

யாழ்ப்பாணம்,ஏப்.23

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் கணக்கு கிளையில் பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியான நிலையில் கணக்கு கிளை 10 நாள்களுக்கு இழுத்து மூடப்பட்டது.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்கு நேற்று முன்தினம் கொரோனா உறுதி செய்யப்பட்ட நிலையில் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வலயக் கல்வித் திணைக்களத்தின் நிதிப்பிரிவு முழுமையாக முடக்கப்பட்டது.

நிதிப் பிரிவில் பணியாற்றும் 17 உத்தியோகத்தர்களும்சுய தனிமைப்படுத்தளிற்கு உட்படுத்தப்பட்டனர்.

திருநெல்வேலியைச் சேர்ந்த இந்த உத்தியோகத்தரது மாமனாருக்கு கடந்த வெள்ளிக்கிழமை பெற்ற மாதிரியில் கொரோனா உறுதி செய்யப்பட்டதனையடுத்து உத்தியோகத்தர் கடந்த சனிக்கிழமை முதல் தனிமைப்படுத்தலிற்கு உட்படுத்தப்பட்டு புதன்கிழமை அவருக்கு பி.சி.ஆர். பரி சோதனை செய்யப்பட்டது. அப்போது அவருக்கும் கொரோனா உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து நேற்றைய தினம் யாழ்ப்பாணம் சுகாதார வைத்திய அதிகாரியின் பரிந்துரையில் 17 உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். இவர்களிற்கான பி.சி.ஆர். பரிசோதனை எதிர்வரும் 2ஆம் திகதி மேற்கொண்டு அதற்கமைய முடிவுகள் எட்டப்படவுள்ளன.

# தொல்லியல் திணைக்கள வழக்கில் தவிசாளர் நிரோஷ் ஒரு லட்சம் ரூபா சொந்தப்பிணையில் விடுவிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஏப்.23

வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தொல்லியல் திணைக்களத்தின் அரச கருமங்களுக்குத் தடை ஏற்படுத்தினார் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றே பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என நீதிபதி பொலிஸாருக்கு அறிவுறுத்தியதுடன் தவிசாளர் ஒரு லட்சம் ரூபா சொந்தப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

தொல்லியல் திணைக்களம் நிலாவரையில் மேற்கொள்ள இருந்த நடவடிக்கைக்கு தவிசாளர் தடை ஏற்படுத்தினார் என்றும் இதன் மூலம் அரச கருமத்துக்குத் தடை ஏற்படுத்தினார் என்றும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு தொல்லியல் திணைக்களத்தின் முறைப்பாட்டுக்கமைய அச்சுவேலி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிமன்றில் நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கில், தவிசாளர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி வி.திருக்குமரன் தலைமையிலான சட்டத்தரணிகள் முன்னிலையாகினர். அவர்கள் தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானியில் நிலாவரைக் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது எனவும் இந்தக் கிணற்றில் இருந்து அப்பால் தான் தொல்லியல் திணைக்களத்தின் முயற்சி இடம்பெற்றுள்ளது. பிரதேச சபை தொடர்ச்சியாக அந்த இடத்தை அரச பெறுகை கேள்விகோரல் நடைமுறைகளின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கி வந்துள்ளது. பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக் கோவை சரத்தின் பிரகாரம் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றே மேற்படி வழக்கின் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்திருக்க வேண்டும். நிலாவரையில் பிரதேச சபை பல முதலீடுகளைச் செய்துள்ளது. தொல்லியல் திணைக்களத்துக்குப் பொறுப்பான அமைச்சரே மாவட்ட அபிவிருத்திக் குழுவின் அனுமதி பெற்றே தொல்லியல் திணைக்களம் செயற்படும் என உத்தரவாதமளித்துள்ளார். ஆனால் இங்கு பிரதேச சபை ஒன்றின் தவிசாளர் என்ன நடக்கிறது என்ற விவரத்தினைக் கேட்டால் அரச கருமத்துக்குத் தடை ஏற்படுத்தினார் என்கின்றனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபையின் தலைவர் என்ற வகையில் தவிசாளர் அங்கு என்ன நடக்கின்றது எனக் கேள்வி எழுப்பியமையை அரச கடமைக்கு தடை ஏற்படுத்தினார் எனக் கருதமுடியாது. நிர்வாக ரீதியாக இரு அரச நிறுவனங்களுக்கு இடையே எழும் பிரச்சினையைக் குற்றவியல் சட்டக்கோவையின் பிரகாரம் அணுகமுடியாது. எனவே இவ்வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என வாதிடப்பட்டது.

தனியாராக இருந்தாலென்ன அரச தாபனமாக இருந்தாலென்ன பிரதேச சபையின் அனுமதி பெற்றே எந்தக் கட்டுமானத்தையும் செய்ய முடியும் என்பதும் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்டது.

தொல்லியல் திணைக்களத்தின் முறைப்பாட்டின் அடிப்படையில் தாக்கல் செய்த அச்சுவேலிப் பொலிஸார் தாம் இவரை முதலாவது எதிராளியாகக் கொண்டு மேலும் பலருக்கு இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளனர் என மன்றில் தெரிவித்தனர். அத்துடன் மன்றில் கடும் ஆட்சேபம் தெரிவித்தனர்.

இந் நிலையில் நீதிபதி, பொலிஸார் தாக்கல் செய்துள்ள குற்றவியல் சட்டக்கோவை சரத்தின் பிரகாரம் முதலாம் எதிராளியாக மன்றில் முன்னிலையாகியுள்ள வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளரை விசாரிப்பதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்பட்டதாக எங்கும் வெளிப்படுத்தவில்லை. அத்துடன் தொல்லியல் திணைக்களத்தின் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கிணறு என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்ததுடன் தொடர்ந்து இந்த வழக்கை நடத்துவதாயின் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று வழக்கைத் தொடருமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்தினார்.

இதேவேளை மன்றில் பிரசன்னமாகியுள்ள வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் மேலதிக விசாரணைகள் ஏற்படின் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் ஒரு லட்சம் ரூபா சொந்தப் பிணையில் செல்வதற்கும் உத்தரவிட்டு அனுமதிக்கப்பட்டார்.

# தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிடம் காணியை ஒப்படைத்தது நீதிமன்றம்!

## அமெரிக்கமிஷன் அருட்தந்தையர்கள் பிணைமுறியில் விடுவிப்பு

அமெரிக்க மிஷன் உரிமைகோரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பராமரிப்பில் உள்ள ஆதனத்தை யூனியன் கல்லூரி நிர்வாகத்திடம் பொறுப்பளித்து மல்லாகம் நீதிமன்றம் கட்டளையிட்டது.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள காணி அமெரிக்கன் சிலோன் மிஷனரிக்குச் சொந்தமான ஆதனம் என்று தெரிவித்து ஒருசில மாதங்களாக மிஷனரியைச் சேர்ந்தவர் களுக்கும் கல்லூரி நிர்வாகத்துக்கும் இடையில் தர்க்கம் நிலவிவந்தது. இது தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இரு தரப்பினருக்கும் இடையில் கடும் தர்க்கம் நிலவியமையால் தெல்லிப்பழை பொலிஸார் மேற்படி விடயத்தை நீதிமன்றில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பாரப்படுத்தினர். இருதரப்புவாத பிரதிவாதங்களின் பின் நீதிபதி –

அமைதிக்குப் பங்கம் விளைவித்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்ட அமெரிக்கன் சிலோன் மிஷன் அருட்தந்தையர்கள் இருவரையும் தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான பிணைமுறியில் விடுவித்த நீதிமன்று அவர்கள் இருவரும் 6 மாத காலத்துக்குள் அமைதிக்குப் பங்கம் விளைவித்தால் பிணைமுறிப் பணத்தைச் செலுத்தவேண்டும் என்றும் உத்தரவிட்டது. கல்லூரியின் மாணவர்களுக்கான உணவுத்திட்ட சமையல் பகுதி மற்றும் துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் அமைந்துள்ள காணியாருக்குச் சொந்தம் என கல்லூரி நிர்வாகத்துக்கும் அமெரிக்க மிஷனுக்கும் இடையில் பிரச்சினை எழுந்தது.

தமக்கே சொந்தம் என சட்ட ரீதியான ஆவணங்களை கல்லூரி நிர்வாகம் வைத்துள்ளனர். அத்துடன் அமெரிக்க மிஷனின் அத்துமீறல்கள் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் செய்யப்பட்டது.

இந்நிலையில் கடந்த 9ஆம் திகதி கல்லூரி மாணவர்கள் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தும் இடம் தமது சபைக்குச் சொந்தமான காணி எனவும் அங்கு துவிச்சக்கர வண்டிகளை நிறுத்த வேண்டாம் எனக் கூறி மாணவர்களுடன் முரண்பட்டு மாணவர்கள் மீது அமெரிக்க மிஷனைச் சேர்ந்த சிலர் தாக்கு தல்களையும் மேற்கொண்டனர்.

அதனையடுத்து அமைதிக்கு பங்கம் விளைவித்தனர் என அமெரிக்க மிஷன் அருட்தந்தையர்கள் இருவருக்கு எதிராக தெல்லிப்பழை பொலிஸாரால், மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் எடுக்கப்பட்டது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரி சார்பில் மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரன், முன்னிலையாகினர். குற்றஞ்சாட்டப்பட்ட அருட்தந்தையர்கள் இருவரும் மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

“பாடசாலையின் மாணவர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்துக்குப் பயன்படுத்தப்படும் சமையல் பகுதி அமைந்துள்ள காணியில் மாணவர்களின் துவிச்சக்கர வண்டி தரிப்பிடமும் உள்ளது. அந்த ஆதனம் கல்லூரியின் பயன்பாட்டில் உள்ளமைக்கு அரச வர்த்தமானி அறிவிப்பும் உள்ளது’ என்று சமர்ப்பணம் செய்த மூத்த சட்டத்தரணி வி.திருக்குமரன், ஆவணங்களை மன்றில் சமர்ப்பித்தார்.

அருட்தந்தையர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணியும் தமது ஆட்சேபனையை முன்வைத்து சமர்ப்பணம் செய்தார்.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த மல்லாகம் நீதிவான் நீதிமன்றம், அமெரிக்கன் மிஷன் உரிமை கோரும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் பராமரிப்பில் உள்ள ஆதனத்தை கல்லூரியிடம் பொறுப்பளித்து கட்டளையிட்டு வழக்கை முடிவுறுத்தியது.

அத்துடன், அமைதிக்கு பங்கம் விளைவித்தனர் என குற்றஞ்சாட்டப்பட்ட அமெரிக்க மிஷனின் அருட்தந்தையர்கள் இருவரை தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான பிணை முறியில் விடுவித்த நீதிமன்று, கட்டளை 6 மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும் எனச் சுட்டிக்காட்டியது.

அதனால் அவர்கள் இருவரும் 6 மாதகாலத்துக்குள் அமைதிக்கு பங்கம் விளைவித்தால் பிணை முறிக்கான பணத்தைச் செலுத்த வேண்டும் என உத்தரவிட்டது.

இதேவேளை, மல்லாகம் நீதிமன்ற கட்டளை மீது மேன்முறையீடு செய்யவோ அல்லது குடியியல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்யவோ அமெரிக்க மிஷனுக்கு உரித்து உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாரதிகளை கண்காணிக்க கூடுதல் உபகரணங்கள்

போதைப் பொருள்களை பயன்படுத்திவிட்டு வாகனங்களை செலுத்தும் சாரதிகளை கண்காணிக்க கூடிய உபகரணங்களை கூடுதல் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த சோதனை நடவடிக்கைகளை மேலும் அதிகரிப்பதற்குப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் இடம் பெற்ற கலந்துரையாடலின் போது கவனம் எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப்பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித்றோஹண தெரிவித்தார்.

வீதி விபத்துகளைத் தவிர்க்கும் நோக்கத்தில் மது போதையில் வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் தொடர்பான சுற்றிவளைப்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது மதுபானம் அருந்தியுள்ள சாரதிகளை அடையாளம் காணுவதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் போதுமான அளவு நாட்டில் உள்ளன.

அதற்கமைய வருடத்திற்கு ஒரு லட்சம் பேர் வரை மதுபோதையில் வாகனம் செலுத்தினர் எனக் கைது செய்யப் பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், போதைப் பொருள்களை பயன்படுத்தி வாகனங்களை செலுத்தும் சாரதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சில் , அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவின் தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றிருந்ததுடன், இதன்போது அமைச்சர் அதற்கான அவசியம் தொடர்பில் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை போதைப்பொருள்களைப் பயன்படுத்திய நபர்களை அடையாளம் காணுவதற்காக வெளிநாடுகளில் பயன்படுத்தப்படும் உபகரணங்களை அதிகளவில் நாட்டுக்கு கொண்டுவந்து, அது தொடர்பான சுற்றிவளைப்புகளை அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

நாடளாவிய ரீதியில் இந்த சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், போதைப் பொருள்களை பயன்படுத்தி வாகனங்களைச் செலுத்தும் சாரதிகள் அடையாளம் காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். இதன்போது அவர்களிடமிருந்து 25 ஆயிரம் ரூபா பணத்தொகையை அபராதமாக அறவிட முடியும். இதேவேளை அவர்களது சாரதி அனுமதிப்பத்திரத்தை செயலிழக்கச் செய்யவோ, ரத்து செய்யவோ நீதி மன்றத்துக்கு அனுமதியுள்ளதாகவும் அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கு குற்றப்புலனாய்வுப் பிரிவு அழைப்பு

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவை குற்றப் புலனாய்வுத்திணைக்களம் விசாரணை செய்யவுள்ளது. இது தொடர்பான அழைப்பை பக் குற்றப் புலனாய்வுப் பிரிவு நேற்று விடுத்திருந்ததாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில், இலங்கையில் 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் வாக்குமூலம் பெறுக் கொள்வதற்காக ஹரின் பெர்னாண்டோ அழைக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் ஹரின் பெர்னாண்டோவைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ஹரின் பெர்னாண்டோவிற்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்திலிருந்து அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனால் அவர் கைது செய்யப்படுவதற்கான சாத்தியம் உள்ளதாகவும் பாட்டலிசம்பிக்கரணவக்கதெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நேற்று உரை நிகழ்த்திய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா நாடாளுமன்றத்தில் புதன்கிழமை ஏற்பட்ட கூச்சல் நிலையைத் தொடர்ந்து சபா மண்டபத்திலிருந்து வெளியேறியபோது நாடாளுமன்ற வாசலில் வைத்து நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவும் ஆளுங்கட்சி உறுப்பினர் ஜனக்க குட்டியாராச்சியும் மோதிக் கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து ஹரின் பெர்னாண்டோ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் குட்டியாராச்சி வெளிவிவகார அமைச்சரும் சபை முதல்வருமான தினேஷ் குணவர்தனவிடம் முறையிட்டார் எனவும் கூறப்படுகின்றது.

## ஹரீன், மனுஷ ஆகியோரை உடன் விசாரிக்க வேண்டும்

### நாடாளுமன்ற உறுப்பினர்கள் 40 பேர் முறைப்பாடு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சூத்திரதாரி தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார வெளியிட்ட கருத்துக்களை ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களுக்குத் தண்டனை பெற்றுக்கொடுக்கும்படி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். சுமார், 40 நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பம் அடங்கிய முறைப்பாட்டுப் பத்திரம் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் கடந்த புதன்கிழமை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி தொடர்பில் தம்மிடம் இருப்பதாகக் கூறும் ஆதாரங்களை, அவர்களிடம் விசாரணை மேற்கொண்டு வெளிப்படுத்த வேண்டும் என்றும், இது தேசிய பாதுகாப்புக்கு மிகவும் தேவையானது என்றும் குறித்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். அத்துடன் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக அவர்கள் அறிந்திருக்கும் இரகசியங்களை வெளிப்படுத்த வேண்டும் எனவும், இதனை வைத்துக்கொண்டு ஐக்கிய மக்கள்சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் இலாபம் தேட முனைகின்றனர் எனவும் அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த முறைப்பாட்டை சஞ்ஜீவ எதிரிமன்ன, பிரமித பண்டார, திஸ்ஸ கெட்டியாராச்சி உள்ளிட்ட ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் பதிவு செய்துள்ளனர்.




## களுத்துறையில் 16 பேருக்குதொற்று 200 பேர் தனிமைப்படுத்தலில்

களுத்துறை, பயகல மற்றும் ஹொரகஸ்கலபொலிஸ் பகுதிகளில் கடந்த புதன்கிழமை 16 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதை அடுத்து சுமார் 200 கிராமவாசிகள் தனிமைப்படுத்தப் பட் டுள்ளனர் என்று கொரோனா பரவுவதை தடுக்கும் தேசிய செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இன்று அல்லது நாளை அந்த கிராம மக்கள் மீது பி.சி.ஆர் சோதனைகள் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், புத்தாண்டு விழாக்களைத் தொடர்ந்து கம்பஹாவில் ராகம, படுவாவத்தை மற்றும் திவுலபிட்டி பொலிஸ் பகுதிகளில் நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் 38 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

## குடாநாட்டில் கொள்ளைகளில் ஈடுபட்ட சந்தேகநபர் சிக்கினார்

### அவருடன் சம்பந்தப்பட்ட அறுவரும் கைது





(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்தில் வயோதிபர் வசிக்கும் வீடுகளில் நள்ளிரவில் புகுந்து வாள்களைக் காண்பித்து அச்சுறுத்தி கொள்ளையிடும் கும்பலின் பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து 18 தங்க நகைகள், பணம் மற்றும் வாள்கள் என்பன கைப்பற்றப்பட்டன.

அத்துடன் சந்தேகநபரிடமிருந்து கொள்ளையிடப்பட்ட நகைகளை கொள்வனவு செய்தமை, விற்பனை செய்தமை, அடகு பிடித்தமை போன்ற குற்றச்சாட்டில் மேலும் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினர் முன்னெடுத்த சிறப்பு நடவடிக்கையில் இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

புன்னாலைக்கட்டுவன் பகுதியில் பூசகர் ஒருவரின் வீட்டுக்குள் சமையல் அறை புகைக் கூண்டு ஊடாக நுழைந்த கொள்ளையர்கள் வாள்களைக் காண்பித்து மிரட்டி நகைகள் மற்றும் பணம் கொள்ளையிட்டுத் தப்பித்தனர்.

அந்த கொள்ளை உட்பட கந்தரோடை, நல்லூர், கந்தர் மடம் என நான்கு இடங்களில் முதியவர்களை மிரட்டி கொள்ளை யிட்ட கும்பலின் பிரதான சந்தேக நபரே கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் நல்லூரைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞன். அவரிடமிருந்து மேற்படி கொள்ளையிடப்பட்ட நகைகளை வாங்கினர், விற்றுக் கொடுத்தனர் மற்றும் அடகு பிடித்தனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலே ஆறு பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தே நபர்கள் 7 பேரும் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான இன்ஸ்பெக்டர் நிகால் பிரான்ஸ்ஸின் வழிகாட்டலில் சப் இன்ஸ் பெக்டர் பிரதீப் தலைமையிலான அணி இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தது.

## வவுனியாவில் விபத்து பாதுகாப்பற்ற கடவையில்

வவுனியா திருநாவல்குளம் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையால் விபத்து ஒன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த ரயில் கடவையில் ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 40 வயதுடைய நிசாகரன் என்பவரே ரயிலுடன் மோதி விபத்திற்குள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில் -

திருநாவல்குளம் மூன்றாம் ஒழுங்கைக்கு முன்பாக உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ரயில் வருவதை அவதானிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக இப்பகுதியில் பல விபத்துக்கள் இடம்பெறும் நிலை காணப்பட்ட போதிலும் அப்பகுதியில் உள்ள ஒட்டோ சாரதிகளின் ஒத்துழைப்பால் விபத்துக்கள் தவிர்க்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் நேற்று வியாழக்கிழமை காலை சுமார் 6.30 மணியளவில் மேற்படி ரயில் கடவையை மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் கடக்க முற்பட்ட போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன் போது மோட்டார் சைக்கிள் சாரதி காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலும் மோட்டார் சைக்கிள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வங்கி அலுவலருக்குத் தொற்று

### 21 பேர் தனிமைப்படுத்தலில்

புத்தலையில் அரச வங்கி உத்தியோகத்தர் ஒருவர், கொவிட் 19 தொற்றுக்குள்ளாகியமை, பி.சி.ஆர். பரிசோதனை மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், குறித்த வங்கியின் 21 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டிருப்பதுடன், அவ்வரச வங்கியும் இரு வார காலத்திற்கு மூடப்பட்டுள்ளது. அத்துடன் தியத்தலாவையில் மேற்கொள்ளப்பட்ட 'அன்டிஜன்' பரிசோதனையின் போது, ஐவர், கொவிட் 19 தொற்றுக்குள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இவர்கள் அறுவரும் கொவிட் 19 சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர் என புத்தலை மற்றும் தியத்தலாவை பொது சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.04.2021 இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org